The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே
ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 18. } ஜூலை 1920. { இலக்கம் ௭.

THE MARIAN CONGRESS.
மரியாயின் மகா சங்கம்.

உலக சமாதானத்தைக் கெடுத்து, உலக முழுவதையும் ஒரு ஆட்டம் ஆட்டிவைத்து அமர்ந்திருக்கும் ஐரோப்பிய யுத்தத்தினால் விளைந்துள்ள கெடுதிகளைவிட அதனால் இனி விளையப்போகும் நன்மைகள் அதிகம் எனப் புகல்வாருமுண்டு. அன்னோர் கூற்றின் உண்மையை அல்லது இன்மையைப்பற்றி இங்கே யாராய்வது நமது கருத்தல்ல; அது எவ்வாறாயினு மிருக்கட்டும். ஆயினும், தற்காலத்தில் ஐரோப்பா யுத்தத்தின் கைகண்ட பலன் பலதிறப்பட்ட தின்மைகளேயன்றி நன்மையேதுமிதுவரையிற் கண்டோமில்லை. இந்தியா, இலங்கை, பர்மாவாகிய இந்த மூன்று நாடுகளிலுமுள்ள கத்தோலிக்கர் அனைவரும் ஏகோபித்து, ஒருமனப்பட்டு, பக்திவேகங்கொண்டு, உற்சாகமுற்று அத்தியந்த ஆரவாரச் சிறப்பு அலங்காரத்துடன் நடத்த விருந்த மரியாயின் சங்கக் கொண்டாட்டத்தை முற்றுங் கெடுக்காதேபோனாலும் அதைத் தடுத்தது இந்த ஐரோப்பா யுத்தமன்றோ? அம்மகாசங்கம் அடுத்த குளிர் காலத்தில் அதாவது, அடுத்த டிசம்பர் அல்லது ஜனவரி மாதத்தில் மிக விமரிசையாய்க் கொண்டாடப்படப்போகிறதென்பதும், அதுசம்பந்தமாய் ஆகவேண்டிய பல காரியங்களும் யாதோர் குறைவின்றி செவ்வனே நடைபெறுவதற்கான வழிவகைகளைத் தக்கபடிச் செய்வதற்குப் பல நிர்வாக சபைகள் ஏற்கெனவே நியமிக்கப்பெற்று வேலை நடந்துவருகிறதென்பதும் நமது நண்பர்களுக்குத் தெரிந்த விஷயங்களே. ஆகவே, இச்சமயத்தில் இந்த மரியாயின் சங்கத்தின் வரலாறு, நோக்கம், பிரயோஜனம் முதலியவற்றைப்பற்றிப் பொதுவாய் ஒரு சிறிது இங்கு குறிப்பிடக் கருதுகிறோம்.

இந்தியாவின் மூன்றாவது சற்பிரசாத சங்கம் 1912ல் சென்னையைச்சேர்ந்த திருமயிலாப்பூரின்கண் நடத்தப்பட்டபொழுது, மரியாயின் பக்தர்கள் பலர் சென்னையிலிருந்து அங்குசென்று வெகு பக்தியுடன் அச்சங்கத்து நடவடிக்கைகளைக் கவனித்து வந்தார்கள். அவர்களில் ஒருவர், மரியாயின் மீது தம்மிருதயத்துள்பற்றியெரிந்துகொண்டிருந்த நேச அக்கினி காரணமாய், "இவ்வாறு நமது கன்னிமரியாயின் மகிமைக்காகவும், தோத்திரத்துக்காகவும், பிரத்தியேகமான கொண்டாட்டம் ஒன்று நாம் ஏன் செய்யலாகாது?" எனச் சிந்திக்கலாயினர்.

இச்சிந்தனையே மரியாயின் சங்கத்துக்கு ஒரு வித்தாக உதவியது. இவ்வித்தானது அவர் இருதயத்திலுமன்றி, அவருடைய சிநேகிதர், உற்றூர், உறவினர் உள்ளத்திலும் ஊன்றி முளைத்து, எழும்பி, தழைத்துக் கிளைக்கத் தொடங்கிற்று. இதைப்பற்றிய விவரங்கள் கடிதமூலமாயும், பத்திரிகைமூலமாயும், துண்டுப் பத்திரங்கள்மூலமாயும் இந்தியா, இலங்கை, பர்மாவாகிய நாடுகளின் நானா விடங்களிலுமுள்ள மரியாயின் மக்களுக்கும், ஏனைய கத்தோலிக்கர்களுக்கும் தெரியவரவே, ஒவ்வொருவரும், மரியாயின் விஷயத்தில் பக்திபூண்டவர்களாய், அந்த ஆண்டவளின் மகிமைக்காகக் கூட்டப்பட உத்தேசிக்கும் சங்கத்தின் செலவுகளுக்காகத் தம்தம்மால் இயன்றவரையிலும் சிறிதேனும் செய்த பொருளுதவியாகிய ஜலமானது "சிறு துளி பெரு வெள்ளம்" போலப் பெருக்கமுற்று, ஷை மரியாயின் சங்கமெனும் மாத்துக்குப் பாயவே, அம்மரம், அரும்பிப் பூத்துக் காய்த்துக் கனிதரத் தொடங்கிற்று. இக்கனியைப் புசிக்கக் கன்னிமரியாயின் மக்களனைவரும் களிப்புடன் காத்துக்கொண்டிருக்கையில், அதாவது, மரியாயின் சங்கங் கூட்டுவதற்குவேண்டிய ஏற்பாடுகள் யாவும் முடிவடைந்துவருகையில், நடுக்கொள்ளைக்காரன்போல், அநியாயமான ஐரோப்பா யுத்தம் குறுக்கிட்டு, அதைத் தடுத்துவிட்டது. அக்காலையில் மரியாயின் சங்கத்துக்காக வசூலான தொகையும் அதன்மேல் கடந்த நான்கு வருஷகாலமாய் ஏறிய வட்டியுஞ் சேர்ந்து இப்போது ரூ 40,000 மாகப் பெருக்கமடைந்திருக்கிறது.

அமலோற்பவநாயகியும், தேவதாயாரும், மோட்ச இராக்கினியுமாகிய கன்னிமரியாயியை மகிமைப்படுத்துவது, அந்நாயகியின் அரிய மேம்பாடான பதவியையும், மகிமைப்பிரதாபத்தையும்பற்றிய விசேஷங்களை ஆராய்ந்தறிந்து, அவைகளை அனைவோருக்கும் பிரசித்தப்படுத்துவது, அவ்வாண்டவள் மீது பக்தியை அபிவிருத்திசெய்து அனைவரும் அவளை நேசிக்கும்படி முயற்சி செய்வது, மெய்யான சர்வேசுரனை இன்னும் அறியாத பல கோடி ஜனங்களை மனந்திருப்புவதற்கு அவ் விராக்கினியின் பலனுள்ள மன்றாட்டை இரந்து கேட்பது, அக்கன்னிகையின் அரிய பல புண்ணியங்களையும், வல்லமை வரப்பிரசாதங்களையும், அவள்மீது நாம் கொண்டிருக்கும் பக்தி, பற்றுதல், வணக்கம், மரியாதைகளையும் சகலரும் அறியும்படி பிரசித்தமான ஆராதனைகள், சுற்றுப்பிரகாரங்கள், திருயாத்திரைகள், சபைகள், கூட்டங்கள், பிரசங்கங்கள், பிரசுரங்கள், ஸ்தாபனங்கள், ஆரவாரக் கொண்டாட்டங்கள், சிறப்புக்கள் நடத்துவது முதலியவைகளைச் செய்வதே இந்த மரியாயின் சங்கத்துக் கருத்துக்களாம். இவை சம்பந்தமாய் நடத்தப்படப்போகிற காரியங்களின் முழு விவரக் குறிப்புக்கள் அடங்கிய துண்டுப் பத்திரங்கள், காலக்கிரமத்தில் சகலருக்கும் வழங்கப்படும்.

இவ்வாறு இந்தியா, பர்மா, இலங்கையாகிய இம்மூன்று நாடுகளிலுமுள்ள கத்தோலிக்கு மேற்றிராணிமார்கள், அதிமேற்றிராணிமார்கள், குருக்கள், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள், மற்ற கிறீஸ்துவ விசுவாசிகள், பக்திமான்கள், புத்திமான்கள், பிரபுக்கள், ஏழைகள், வாலர், விருத்தர், ஸ்திரிகள், புருஷர்கள் முதலிய யாவரும் ஏகோபித்து ஒருமனப்பட்டு ஏற்படுத்திய இந்த மரியாயின் சங்கம் நடத்தப்போகிற பற்பல கைங்கரியங்களினால், சர்வேசுரனுக்கு அதிக மகிமை தோத்திரமும், பரிசுத்த கன்னிமரியாயிக்கு மன ஆறுதல் சந்தோஷமும், சம்மனசுக்கள் முதலிய மற்ற மோட்சவாசிகளுக்கு ஆனந்த அக்களிப்பும் உண்டாகும் என்பதிற் சந்தேகமில்லை. மேலும் ஷை மூன்று நாடுகளிலுமுள்ள கத்தோலிக்குச் சகோதரருக்குள் அதிக ஒற்றுமை, நேசபான்மை, உற்சாகம், மன ஆறுதல், சர்வேசுரன்பேரிலும், அர்ச். கன்னிமரியாயின்பேரிலும் அதிக பக்தி விசுவாசம், பிறருக்கு நன்மாதிரிகை, பாவிகள் மனந்திரும்புதல் முதலிய பல ஞான நன்மைகள் சித்திப்பதுமன்றி அஞ்ஞானிகள், பதிதர் முதலானோர்கள் பரிபக்குவமடைந்துமனந்திரும்புதலுங் கைகூடுமன்றோ? இத்தகைய பிரயோஜனங்கள் அடையக்கூடிய இந்த மரியாயின் மகா சங்கம் இனிது நடைபெற்றுக் கோரிய நன்மை கிடைக்குமாறு சர்வேசுரன் கிருபை புரிவாராக!

சில வருஷங்களுக்குமுன் அதாவது, 1912-ம் ௵த்தில் மயிலையில் நடைபெற்ற சற்பிரசாதசங்கத்தின் சிறப்புக் கொண்டாட்

டங்களையும், விசேஷமாய் அக்காலை நிகழ்ந்தேறிய பெரியதோர் சுற்றுப்பிரகாரத்தையும், சமீபத்தில் சென்னையில் சமாதானக் கொண்டாட்ட சம்மந்தமாய் நிறைவேறிய கத்தோலிக்கரின் சுற்றுப்பிரகாரத்தையும், நமது நண்பர்களில் அநேகர் தரிசித்திருக்கலாம், அல்லது அவைகளைப்பற்றிய விபரங்களைப் பத்திரிகைமூலமாயாவது, கண்டவர்களின் வாய்மூலமாயாவது கேட்டிருக்கலாம். அவ்விரு கொண்டாட்டங்களும், மகத்தானவைகளும், கண்டவர்கள் கேட்டவர்கள் மனத்தினின்று எளிதில் எடுபட அல்லது மறக்கப்படக்கூடிய சம்பவங்கள் அல்லவென்பதற்கு அவற்றைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் அனைவரும் சாட்சி பகர்வார்கள். ஆனால், இந்த மரியாயின் சங்கக் கொண்டாட்டங்களும், சிறப்புக்களும், சுற்றுப்பிரகாரங்களும், மேற்கண்டவைகளைவிட பன்மடங்கு மீசுரமாயிருக்குமென்பதற்கோர் ஐயமில்லை. இச்சங்கக் கொண்டாட்டங்களுக்கு சுமார் நாற்பதுக்கதிகமான அதிமேற்றிராணிமார்களும் மேற்றிராணிமார்களும், நூற்றுக்கணக்கான குருப்பிரசாதிகளும், பல்லாயிரங் கிறீஸ்துவ விசுவாசிகளும் விஜயஞ்செய்வார்களென்றால், அப்பெருஞ் சங்கத்தின் பெருமையையும், மகத்துவத்தையும் நண்பர்கள் ஒருவாறு தெரிந்துகொள்ளல் கூடும். இதுவரையில் இத்தகைய பெருங்கூட்டம், இத்தன்மையான ஆரவாரச் சிறப்புக் கொண்டாட்டங்கள் இத்தென்னிந்தியாவில் நாமெங்குங் கண்டதில்லையென்று சொல்லும்படியாயிருக்கும். இந்த பக்திக்கும், சன்மார்க்கத்துக்கும், ஞான நன்மைக்குமான சங்கத்தின் அரிய நடவடிக்கைகளையும், மகத்தான காக்ஷிகளையும் நமது நண்பர்களில் ஒவ்வொருவரும் தரிசித்து ஞானனந்தமடைய இன்றுமுதல் பிரயத்தனப்படுவார்களாக!

செத்தாலும் சாகிறதேயொழிய ஒரு அற்பப் பாவத்தையாகிலுஞ் செய்வதில்லையென்று கெட்டியான பிரதிக்கினைபண்ணிக்கொண்டிருப்பாயாக.

பாவமில்லாத சந்தோஷங்களைமுதலாய் அநேகம் விசையில் சுவாமியைப்பற்றி வெறுத்துவிடுவாயாக.

ஒரு நாளைக்கொருமணி நேரமாகிலும் தியானம்பண்ணுவாயாக. —(அர்ச். லிகோரியார்.)

FIGURES OF OUR LADY.

மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XIV

தாவீதின் உப்பரிகை.

"அரண்களிடப்பட்ட தாவீதின் உப்பரிகைக்கு (கோபுரத்திற்கு) நிகராய் (இருக்கின்றாய்). அதில் ஆயிரங் கேடயங்கள் கட்டித் தொங்குகின்றன" (உந்நத சங். IV. 4).

புண்ணியவானுந் தைரியசாலியுமான தாவீது தனக்கெதிராய்வந்த சத்துராதிகளையெல்லாஞ் செயித்தான். பிற்காலத்தில் எதிரி ஜெருசலேம் பட்டணத்தைத் தாக்காமலிருக்கவும், தாக்கின் அவர்களைக் காபந்தான விடத்திலிருந்து துரத்தவும், உதவியான ஓர் கோட்டையைக் கட்டினான். அதற்குச் சுற்றிலும் அரண்களிடப்பட்டிருந்தன. அதில் ஆயிரக்கணக்கான கேடயங்களும், அக்காலம் வழங்கிவந்த ஆயுதங்களும் அபரிமிதமாயிருந்தன. இக்கோபுரமானது பெத்லேம் நகரின் வாயலண்டை கட்டப்பட்டிருந்தது. பின்னர் அது அழிந்துபோக, அவ்விடத்தில் மற்றோர் கோட்டை உண்டுபண்ணப்பட்டது. அது தாவீதின் கோபுரம் என வழங்கலாயிற்று.

1. கன்னிமரியாயைத் தாவீதின் கோபுரமாக உவமித்துக் கூறலாம். ஏனெனில், மெய்யான தாவீதாகிய கிறீஸ்துநாதர் கன்னிமரியாயாகிய அந்த ஞானக் கோட்டையை யமைத்து அவளை ஓர் பலத்த கோபுரமாக ஸ்தாபித்தார். பராக்கிரமசாலிகளின் ஆயிரக்கணக்கான கேடயங்களை அவளுக்கு ஆதாரவாக அளித்துள்ளார். நிற்க, சத்துருவின் சகல சங்கடங்களிலும் நின்று அவர்களைக் காப்பாற்றினர். அவளைப் புண்ணியத்தில் எவ்வளவு உறுதியாகவும் ஸ்திரமாகவும் நிலைநாட்டினரென்றால் நாகக் கூளிகள் அப்புண்ணியவதியைத் தாக்கத் துணியவில்லை.

அர்ச். மரியாய் தாவீதின் கோபுரம். ஏனெனில் அவள் தாவீது இராஜா வம்சத்தினள். மெய்யான தாவீதாகிய கிறீஸ்துநாதருக்கு முன்

னேடி சலமோனின் பிதாவாகிய தாவீது. தாவீதாகிய கிறீஸ்துநாதர் பேயாகிய கொலியாத்தின் கொட்டத்தை யடக்கி, மானிட சந்ததியின் பாவத்தைப் போக்கி, மோக்ஷவழி நோக்கிச் செல்லும்வண்ணம் கோபுரம்போன்ற கன்னிமரியாயினிடமிருந்து கேடயங்களையும் ஆயுதங்களையும் பெற்றார். அதாவது, நமது இரட்சணியத்தின் விலையாகச் சிலுவைமரத்தில் கொடுத்த சரீரத்தையும் இரத்தத்தையும் கன்னிமரியாயினிடத்தன்றோ பெற்றார்?

2. கோபுரமானது மற்றக் கட்டிடங்களைவிட உயர்ந்தது. அதுபோலவே கன்னிமரியாய் உலக காரியங்களில் சிந்தை கவிழ்ந்துபோகாது, அவைகளைக் கீழே விட்டுவிட்டு உயர்ந்து நின்றாள். உலகாசாபாசங்களால் பீடிக்கப்படாது சர்வேஸ்வரனையும் மோக்ஷ காரியங்களையும் எவன் தியானிப்பானோ அவன் உலகத்திலுயர்ந்தவனுவான். இப்புவியில் பிறந்தவர்களில் யார் மரியாயைவிட அதிகமாய்த் தனது மனோவாக்குக் காயம் யாவற்றையுங்கொண்டு கடவுளைத் தியானித்தவண்ணமிருந்தவர்? ஐயமற மரியாய்க்கிணை ஒருவருங் கிடையாதே. ஒருவன் எவ்வளவுக்கு பூலோக காரியங்களைக் கவனியாது மேல்லோக காரியங்களில் கண்ணுயிருப்பானோ அவ்வளவுக்குச் சர்வேஸ்வரன்முன் அவன் உயர்ந்து நிற்பான். மரியாயோ தனது சிந்தனை வாக்குக் கிரிகைகளில் கடவுளுக்குப் பிரியப்பட்டபடியேயிருந்ததால் வேறெவரையும்விட அதிகமாய் உயர்ந்து நின்றாளென்பது பொய்யாகாது. மரியாய் தன் நடையுடை பாவனையில் கோபுரத்தின் முனைபோல் மேல் நின்றபோதிலும், அதின் அஸ்திவாரத்தைப்போல் பூமியின்மேலே நின்றாள். ஆயினும், அர்ச். சின்னப்பருரைப்பதுபோல் அவள் பூமியிலிருந்தபோதிலும் அவளது ‘சம்பாஷணை மோக்ஷத்திலேயே யிருந்தது.’

3. கோபுரமானது அதின் பலத்திற்குப் பேர்போனது. சத்துருக்கள் அதைத் தாக்குகையில் உடைபடாது எதிர்த்து நிற்கவேண்டியிருப்பதால் கோபுரம் எப்போதும் பலமாகக் கட்டப்படும். மரியாயைவிட பலமுள்ள கோபுரம் மானிட சந்ததியிலுண்டோ? அவள் மெய்யாகவே பலமுள்ளவள். எனெனில் அவளுடைய பலமெல்லாங் கடவுளிடமிருந்தே சார்ந்தது. கடவுள் அவளுக்களித்த வரப்பிரசாதம் எவ்வளவு இருந்ததென்றால் அவள் தன்னுடைய புண்ணிய கிருத்தியங்களில் சற்றேனும் ஒருபோதுங் குறைசெய்யவில்லை. தனக்குள்ள அதிமிக்கப் பலத்தினிமித்தம் ஆபத்துக்களுக் கஞ்சவில்லை. சோதனையிலும் பாவ சமயங்களிலுந்தான் நமது பலவீனம் தென்படும். அவைகளுக்கு உட்பட்டால் சத்துருவால் தோற்கடிக்கப்பட்டவர்களாவோம். மரியாயினிடத்தில் பாவநிழல்முதலாய் அணுகவில்லை. அவள் கடவுளை நம்பியிருந்ததால் பலமுள்ளவளா யிருந்தனள். நாம் நம்மையே நம்பியுள்ளோமாகையால் பலவீனர்களாயிருக்கின்றோம்.

4. ஓர் ஊரையாகிலும் இடத்தையாகிலுங் காபந்துபண்ணுவதற்காகக் கோபுரங்கள் கட்டப்படுவது வழக்கம். அவைகளின் உதவியால் எதிரிகள் வராது தடுக்கவும், வந்தால் துரத்தவுங் கூடும். மரியாய் நம்மைக் காபந்துசெய்யுங் கோபுரமன்றோ? எனெனில் நமக்குத் தாயாகவும், பாதுகாவலாகவும், பரிந்துபேசுபவளாகவுமே அவள் கொடுக்கப்பட்டிருக்கின்றனள். ஆகையால் தாய் நேசத்தோடும் வாஞ்சையோடும் நமக்கு வரும் ஆபத்து சமயங்களில் நம்மை நிச்சயமாய்க் காப்பாற்றுவாள் என்பது திண்ணம். நமது சோதனை சமயத்தில் தேவ அருளும், அந்தியகாலத்தில் மனோதைரியமும் நமக்குப் பெற்றுத் தருவாள். ஆனதுபற்றியே “அன்புள்ள தாயே! நான் இவ்வுலகின்கண் இருக்கையில் சத்துருவின் கையில் அகப்படாதிருக்கவும், என்னந்தியகாலையில் என்னாத்துமத்தைக் காப்பாற்றவும் முன்வந்தருள்வாய்” என்று அத்தாயை மன்றாட திருச்சபை கற்பிக்கின்றது.

5. போர் புரிவோர்க்குக் கோபுரம் ஓர் அடைக்கலம். அங்கு அவர்கள் அச்சமின்றியிருக்கலாம். கன்னிமரியாயும் அடைக்கலம் அளிக்கும் ஓர் கோபுரமே. உலகம் போர்க்களம். நாம் சண்டைபோடவேண்டியது சகஜம். வீரமுந் தீரமுமுள்ள விரோதிகள் நம்மை எதிர்ப்பர். அச்சமயம் தேவதாயினிடத்து நாமடைக்கலம்புகலாம். அங்கு நமக்குப் பயமில்லை. நம் தாயாம் அவள் நம்மைக் காப்பாற்றுவாள். “விசுவாசிகளின் அடைக்கலமாய் மரியாயிருப்பதால் அவளைத் தாவீதின் கோபுரத்திற்கு ஒப்பிட்டிருக்கின்றது. யார் யார் அங்கு அடைக்கலம் புகுகின்றனரோ அவர்களையெல்லாங் காக்க

கேடயங்கள்போல் சம்மனசுக்கள் அங்கு நிற்கின்றனர். அக்கோபுரத்தினிடத்துப் பராக்கிரமசாலிகளின் ஆயுதங்களும் நிறைந்துகிடக்கின்றன. அதாவது: "சகல அர்ச்சியசிஷ்டவர்களும் மரியாயின் உதவியைத் தேடுவோர்க்குச் சகாயஞ் செய்வோர் என்பதே" எனப் பெரிய ஆல்பெர்து என்பவர் பகர்கின்றார்.

விசேஷமாய்ப் பாவிகளுக்கு அடைக்கலமளிக்குங் கோபுரம் மரியாய். பாவியைத் தண்டிக்க ஓர் உலக சத்துருவல்ல—சர்வேஸ்வரனின் கோபாக்கினையே தொடர்ந்துவருகின்றது. அவன் எப்படித் தப்பிப்பான்? சர்வவியாபியாகிய கடவுளைவிட்டு எங்கு மறைவான்? தேவ கோபாக்கினையை எங்ஙனம் விலக்கக் கூடும்? அவனுக்கு அச்சம் அடக்கவொண்ணா வண்ணம் மேவிடின் கோபுரமொன்றிருக்கிறது. அங்கு அடைக்கலமடையட்டும்; இரட்சிக்கப்படுவான். அக்கோபுரமே அர்ச். மரியாய். அத்தாயை நாடிச் செல்வானாகின் காப்பாற்றப்படுவான். "மரியாயின் நாமம் ஓர் பலமுள்ள கோபுரம். ஓர் பாவி அவளிடந் தஞ்சமடைவானாகில் காப்பாற்றப்படுவான்" என்று ரிச்சர்ட் என்பவர் உறுதி கூறுகிறார்.

அர்ச். வில்லோனோவா தோமையார் அக்கருத்தைக்கொண்டே பின்வருமாறு சொல்லுகிறார். "இந்தக் கோபுரம் சத்திய திருச்சபையின் அரண். அதுவே பாவிகளின் ஏக அடைக்கலம். ஆகையால் எல்லாக் குற்றவாளிகளும், பலவீனர்களும், துன்புறுவோரும் மரியாயினிடம் போகட்டும். அத்தாய் அவர்களைக் காப்பாற்றுவாள். சத்துருக்களிடமிருந் தவர்களை யிரட்சிப்பாள். ஓ! கிறீஸ்துவர்களே! உங்களுக்கு வரும் இக்கட்டுகளில் மரியாயை யண்டிப்போங்கள். நீங்கள் பாரத்தாற் சுமத்தப்பட்டிருந்தால், சோதனைகளால் நெருக்கப்பட்டிருந்தால், கஸ்தியால் மனங்குலைந்திருந்தால், இக்கோபுரத்தை நோக்கிப் போங்கள். மரியாயினிடந் தீவிரித்து நாடுங்கள்.

"மிக விவேகமுள்ள கன்னிகையே! ஓர் ஊருக்குக் காபந்தாகக் கோபுரமிருப்பதுபோல் நீர் பாவிகளுக்கு அடைக்கலமாக இருக்கின்றீர். தனக்கு நேரிட்ட இடைஞ்சல் அவசர சமயத்தில் வெல்லப்படாத இக்கோபுரத்தையே ஒருவன் நாடி ஓடிவரவேண்டும். 'பரிசுத்த தேவதாயே! உமதடைக்கலத்தை நாடி வருகிறோம்' என்று ஓலமிடுகின்றனர். ஓ! பரிசுத்தக் கன்னிமரியாயே! எளியோருக்குந் தாழ்ச்சியுள்ளோருக்குஞ் சமாதானம் விரும்புவோர்க்குந் தஞ்சமளிக்குங் கோபுரம் நீர்தான். திருச்சபையைக் காப்பாற்ற தமது திராட்சைத்தோட்டத்தில் ஆண்டவர் கட்டுவித்த கோபுரம் நீர்தான்" என ரயிமோண்ட் ஜோர்தானுஸ் மரியாயைப் புகழ்ந்து அழைக்கின்றார்.

6. "கோபுரமானது திருச்சபையில் விசேஷமாய் மரியாயின் பேரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சபைக்குச் சமானம்" என்று அர்ச். அல்போன்சஸ் செப்புகின்றார். அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியார் விசுவாசிகள் இப்பேர்ப்பட்ட சபைகளில் சேரவேண்டுமெனக் கற்பித்துவந்தார். குருப்பிரசாதிகள் தங்களிடம் பாவசங்கீர்த்தனத்திற்கு வருகிறவர்களைச் சபைகளில் சேரத் தூண்டும்படி அர்ச். சார்லஸ் பரோமியோ சொல்லிவந்தார். "சபையானது தாவீதின் கோபுரம் என்கலாம். ஆயிரங் கேடயங்களும் பராக்கிரமசாலிகளின் ஆயுதங்களும் அதில் தொங்குகின்றன. சபைகளில் (விசேஷமாய் தேவமாதா சபைகளில்) சேர்வோர்க்கு வரும் நலமென்னவெனில்:—(1) நரகக் கூளியை எதிர்த்துச் சண்டைபோடவேண்டிய ஆயுதங்களும். (2) ஆத்துமத்தைச் சுத்தமாய்க் காப்பாற்ற அவசரமான வழிவகைகளும் அங்கு எளிதில் அகப்படும் என்பதே" என அர்ச். அல்போன்சுஸ் செப்புகிறார்.

(இன்னும் வரும்.)

M. S. M.

மனிதர்களோடு அவசரமின்றிப் பேசுவதைவிட்டு தனித்திருந்து சுவாமியோடு சம்பாஷித்திருப்பாயாக.

உன்னகத்தி லெழும்பும் பாவங்களை யடக்கி வெளி இந்திரியங்களை மட்டுக்கட்டி ஒறுத்தல் செய்வாயாக.

என்னத்தைச் செய்தாலும் உன் மரணவேளையில் எப்படிச்செய்வாயோ அப்படியே செய்வாயாக.

நீ செய்யும் நற்கிருத்தியங்களை மனிதருக்கு பயந்தாகிலும் சோம்பேறித்தனத்தினாலென்கிலும் குறைக்காமல் இருப்பாயாக.

உன்னால் கூடுமானவரையில் பிறருக்கு உபகாரம் செய்வாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

7-ம் அதிகாரம்.

தேவ அக்கினியின் பிரகாசம்—பாஸிதாஸின் வருகை—தாய் சிந்தும் கண்ணீர்களின் வல்லபம்—அகுஸ்தீன் மனேக்கிய மதத்தைவிட்டு நீங்குவது.

(கி. அ. 377—383.)

(முன் தொடர்ச்சி.)

கடைசியாய் அகுஸ்தீன் விசனமிகுதியால் வியாதியில் விழுவாரென்று யாவருக்கும் பயமுண்டாயிற்று. துக்கத்தினால் திரேகம் மெலிந்து, நாள் முழுதும் அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாகவேயிருப்பார். தன் கடமைகளை நிறைவேற்றமாட்டார். அழுது, அழுது, அழுது, அழுதே காலம் போக்குவார். ஆதலால் எப்படியாகிலும் சரி, அவரது துயரத்தை மறக்கடிக்கவேவேண்டும் என்பது, காதலாமலகம்போல யாவருக்கும் தெரியவந்தது. தகாஸ்தேயை விட்டுவிட்டு, கார்த்தேஜ் நகருக்குப் போகும்படி அவரது நேசர்கள் அவருக்கு யோசனைகொடுத்தார்கள். ஊர் விட்டு ஊர் போவதினாலும், பெரிய பட்டணத்திலுள்ள வேடிக்கை விநோதங்களைப் பார்ப்பதினாலும், அங்கே யாதாமொரு உத்தியோகத்தில் அமர்ந்து கொள்ளுவதினாலும், தன் துக்கம் ஒழியுமென்று நம்பி ஆகட்டுமென்று ஒத்துக்கொண்டார்.

இந்த சங்கதியைக் கேட்டவுடன், மோனிக்கம்மாளுக்கு குபீர் என்று துக்கம் மேலிட்டது. ஏனெனில், அவரது சீவனுக்கு மோசம் வாராமல் அவர் சுகமடையவேண்டுமென்பது தன் ஆசையும் விருப்பமுமாயிருந்ததால், அவர் தகாஸ்தேயுக்குப் போகும் விஷயத்தில் தான் தேவ சித்தத்திற்கு அமைந்திருந்தபோதிலும், கார்த்தேஜ் என்னும் பெயரைக் கேட்டவுடன் நடுங்கினாள். அப்பட்டணத்திற்குப்போயல்லவோ, முன் அவர் விசுவாசத்தை யிழந்தது, புண்ணிய வொழுக்கத்தை விட்டுவிட்டது. ஆதலால் அப்பட்டணத்திற்குத் திரும்பிப்போனால், அங்கிருக்கும் பாவச்சோதனையால், அவரது இருதயத்திலிருக்கும் தேவ அக்கினியின் கடைசி பொறியும் பூற்றுப்போகுமேயென்று பயந்தாள். ஆனால் கெட்டதிலிருந்து நன்மை விளையுமென்னும் வேதாகம வாக்கியப்படி, துக்கத்திலிருந்தும் துயரத்திலிருந்தும், விசேஷமாய் பெருந்தகைமையுள்ளவர்கள், நல்ல படிப்பினைகளை யடைகிறார்கள். அகுஸ்தீன் முழுதுமாய் மனந்திரும்பினபிறகு, கார்த்தேஜுக்குப் போனவரல்ல. ஆனால் இப்போதோ, இன்னும் சத்திய வேதத்திற்கு விரோதமான கொள்கைகளைக் கைக்கொண்டிருந்தார். இருந்தும், பூலோகத்தின் மாய்கையும் வீண்சளுக்கும் அவருக்குக் கொஞ்சம் தெரிந்திருந்தது. ஜோபென்பவரைப்போலவே அவரும் புலம்பத் துவக்கி, ஒரு மரண கீதத்தைப் பாடினார். அது சிறந்த கீதம். "அதன் முதல் சுரம் எடுத்துப் பாடினதும், ஆத்துமமானது உலகத்தின் அநித்தியத்தை யுணர்ந்து தேவ பாரிசமாய்த் தாவும்."

இக்கீதத்திற்கு இரண்டு பாகமுண்டு, முதல் பாகம் துயரம். உலகம் கடந்துபோவதையும், உலக சந்தோஷம் மின்மினிப்பூச்சிக் கொப்ப மறைந்துபோவதையும், அப்பாகத்தில் பிரலாபித்துப் பாடியிருக்கின்றது. அகுஸ்தீன் கார்த்தேஜ் நகருக்குத் திரும்பிப் போகும்போது, இதையே தியானித்துக்கொண்டுபோனார்.

உலக வாழ்வுகளினிழிவு.

"கனத்திலிழிந்து சாயவரை கரத்தில்விழுந்து போவரும்
வனத்தில் வளர்ந்து போகவயல் வயத்தில் மெலிந்து
[பாயவலை
யினத்திலிரிந்து பேரு மிலவிளிப்படவந்த வாரியென
தனத்திலிருந்த வாழ்வினிமை தவிர்க்கனிறைந்த
[ஞானமதே."

அவர் சொல்வது "ஓ! என் ஆண்டவரே, உம்மை விட்டுவிட்டு வேறு காரியங்களில் ஞான சவுந்தரியத்தையும் இளைப்பாற்றியையும் தேடும் ஆத்துமத்திற்கு, இவ்வுலகில் எப்படிப்பட்ட சஞ்சலம்? சிருஷ்டிகளின் அழகு சவுந்தரியம் யாவும் வீணே. அவைகளுக்கு முதலுமுண்டு முடிவுமுண்டு. அவைகள் துவக்கும்போது முடிவின்றி எப்போதும் இருப்பதுபோலவே துவக்குகின்றன. அவைகளுக்கெல்லாம் ஒரு வயதும் காலமுமுண்டு. அவ்வயதையும் காலத்தையும் அவை

அடைந்தானவுடன் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து காணாமல்போகின்றன. உலகத்தின் எல்லா காரியங்களும் அப்படியே வதங்கி வாடி ஒன்றுமில்லாமையாய்ப்போகின்றன. ஆதலால் உலக பெருமை சந்தோஷங்கள் துவக்கி எவ்வளவு சீக்கிரத்தில் தங்கள் உச்சத்தையடைய முயலுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் நீர்க்குமிழிக்கொப்ப மறைந்துபோகின்றன. என் கர்த்தாவே, என் ஆத்துமம் அவைகளை நாடாதபடி செய்யும். ஏனெனில், அவைகள் தங்களைப் பற்றித்தாவும் ஆத்துமத்தைப் புண்படுத்திவிட்டுப் பறந்து போய்விடுகின்றன. ஆத்துமமானது துவக்கத்தில் உலக பெருமை ஆடம்பரங்களில் மனப்பூரணமாய் மகிழ்ச்சிகொள்ளும். ஆனால் அப்படி எப்போதும் மகிழ்ச்சிகொண்டிருக்க ஆகிறதில்லை. ஏனெனில் அவ்வுலக பெருமை ஆடம்பரங்கள் நிலையின்றி மறைந்துபோகின்றவை. அவைகளைக் கட்டிப் பிடித்துவைக்கவும் முடியவில்லை. அவைகள் எப்போது தோன்றுமோ அப்போதே மறையவும் துவக்குகின்றன.''

உலக அநித்திய சந்தோஷங்களைப்பற்றி அவர் இயற்றிய புலம்பலின் முதல் பாகம் இதுவே. இதற்கிசைவாக இன்னொரு பாடலில்லாமற்போனபோதிலும், இப்பாடலே உலகத்தின் அநித்தியத்தைக் காட்டி ஆத்துமத்திற்கு நன்மை பயக்க ஏதுவாயிருக்கும். அப்படியானால், இப்பிரலாபப் புலம்பலின் ஆழ்ந்த அர்த்தத்தைக் கண்டுபிடித்துத் துக்கித்தபோதிலும், அத்துக்கத்தில் ஒரு ஆறுதலைத் தேடிய இவருக்கு என்ன ஆச்சுது ?

ஆம், எல்லாம் கடந்துபோகின்றன. ஆனால் திரும்பத் தோன்றும்படியாகத்தான். எல்லாம் உதிர்ந்துபோகின்றன. ஆனால் திரும்பத் துளிர்க்கும்படியாகத்தான். யாவரும் மரணமடைகிறார்கள். ஆனால் திரும்ப ஜனித்துப் புது உருவடையத்தான். அர்ச். அகுஸ்தீன் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று, தேவ நேசத்தின் உந்நத பதவியையடைந்து, சீவியத்தின் இரகசியம் இன்னதென்றறிந்தபிறகு, சில வருஷகாலம் வரைக்கும் தெய்வீக வாக்குச் சாதுரியத்துடன் சொல்லிக்கொண்டுவந்ததிதுவே. அவர் சொல்வது "ஓ! என் ஆத்துமமே, உனக்கென்ன தெரியும் ? எல்லா பரம ரகசியங்களையும் அறிவாயோ ? இல்லையே, சொற்பம்மாத்திரந்தான் உனக்குத் தெரிகிறது. அப்படியிருந்தும், அச்சொற்பம் உனக்கெவ்வளவு சந்தோஷத்தை யுண்டாக்குகிறது பார். ஆ! நீ சகலத்தையும் அறியும் சக்தியுள்ளவனாயிருந்தால், இவ்வுலகமும் அதன் அநித்திய சீவியமும் எப்போது தொலையுமோவென்று பெருமூச்சுவிடுவாய். நீ ஜென்மப்பாவத்தோஷமின்றி காரியாதிகளைச் சரிவர அறியக்கூடுமானவனாயிருந்தால், சீவியத்தின் பரம ரகசியங்கள் அனைத்தையும் அறியுந் திறமை உனக்கென்று வாய்க்குமோவென்று ஆவல்கொள்வாய். ஒருத்தர் செய்யும் உபந்நியாசம் உனக்கதிக பிரியமாயிருந்தால், அவ்வுபந்நியாசத்தின் ஒவ்வொரு வாக்கியம் முடிந்ததும் அதற்குப் பிறகென்ன ? அதற்குப் பிறகென்ன ? வென்று ஆவலோடு செவிகொடுத்து, அனைத்தையும் கேட்டு மகிழ்ச்சியடைவாயன்றோ ? உலக விஷயத்திலும் அப்படியே. இப்போது உலகத்தின் இரகசியங்களில் சிலவற்றைமாத்திரம் நீ அறிந்தும் எவ்வளவோ மகிழ்ச்சியடைகிறாய். ஆனால் அனைத்தையும் எக்காலத்திலாவது நீ அறியும்பட்சத்தில், உனக்கெவ்வளவோ மனக்களிப்புண்டாகும்.''

உலகத்தில் பேரும் பெருமையும், சீருஞ் செல்வமும், ஒரு நிலையாயிராமல், தேர்ச்சக்கரம் உருளுவதற்கொப்ப மாறி மறையும்போது, நமக்கெவ்வளவோ விசனமுண்டாகிறது. அச்சமயத்தில் அவ்விசனத்தைப் போக்கி நமதாத்துமத்தைத் தேற்றும் உசிதமான யோசனை யிதுவே. இதுவே ஞானமென்னப்படும். எவனொருவன் இப்படிப்பட்ட ஞானத்தை யடைந்து, உலக காரியங்களிலுண்டாகும் மாற்றத்தைச் சந்தோஷத்தோடு அல்லது சஞ்சலமின்றி யேற்றுக்கொள்வானோ, அவனே பாக்கியவான். ஆனால் இச்சரிதைக்கடுத்த பருவத்தில், அகுஸ்தீன் அப்படிப்பட்ட ஞானத்தை யடைந்திருந்ததில்லை. அவர் வாயிலிருந்து வந்ததெல்லாம் புலம்பலே. தன் கண்களை யேறெடுத்து மோட்சத்தை அண்ணாந்துபார்த்தார். ஆனால் அங்கு அவருக்கு ஆறுதல் கிடைக்கவில்லை. தாகங்கொண்டவன் கானலைக்கண்டு ஆசையுடன் ஓடிப்போய் ஏமாந்துபோவதைப்போல், தனக்கு ஆறுதலளிக்க ஏலாத வஸ்துவை நாடிச்சென்று மோசம் போனார். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் என்ன செய்வது ? கல்விப்பயிற்சிக்கடுத்த காரியங்களில் தன் மனதைச் செலுத்தி, அப்படியாவது தன்

கவலை விசாரத்தை நீக்கிக்கொள்ளத் தேடினர்.

ஆதலால் அகுஸ்தீன் தன் இறகையெடுத்து முதல் புஸ்தகம் எழுதினர். அவர் எழுதத் தெரிந்துகொண்ட விஷயத்தைப் பார்க்கும்போது, அக்காலத்தில் அவர் ஆத்துமம் அடைந்திருந்த எழுச்சியும் அவரது ஆசாபாசங்கள் கொண்டிருந்த அவாவும் நமக்குத் தெரியவருகிறது.

அவர் சௌந்தரியத்தைப்பற்றி எழுதத் தொடங்கினர்.

சௌந்தரியத்தை நாம் ஆசித்து விரும்பாவிட்டால், வேறு எதை ஆசித்து விரும்புகிறோம்? வாலிபன் சொப்பனம் காண்பது எவ்விஷயத்தைப்பற்றி? விருத்தாப்பியன் தன் கடைசி நாட்களில் எதை எண்ணிப் பெருமூச்சுவிடுகிறான்? உலக வியல்பிலும், ஆகாயத்திலும், கடலிலும், உந்நத பர்வதங்களிலும், மனிதனிடத்திலும், சித்திரவேலையிலும், நாம் எதைத் தேடுகிறோம்? நமது ஆத்துமா எதை நாடித் தாவுகிறது? சவுந்தரியத்தையல்லவோ? அப்படியானல் சவுந்தரியம் எதில் அடங்கியிருக்கிறது? பிளாட்டோ, விஸரோ என்னும் கிரந்தகர்த்தாக்கள் எழுதிய புஸ்தகங்களில் தான் படித்தறிந்த காரியங்கள் இன்னும் அவருக்கு ஞாபகத்திலிருந்தபடியால், அவைகளையும், அக்காலத்தில் தன் மனதில் தோன்றத் துவக்கிய உச்சிதமான கருத்துகளையும், ஆதாரமாக வைத்துக்கொண்டு, சவுந்தரியம் இன்னதென்று தெளிவாய் விவரித்துக்காட்டினர்.

இக்காலத்தில் அவருடைய உணர்ச்சித்திறமை முதல்முதலாகக் காந்திவிட்டுப் பிரகாசித்தது. இப்போது அவருக்கு வயது இருபத்து நான்கு.

இவ்வயதில் அவருடைய மனது எதை நாடியிருந்ததென்றும், அவாது ஆத்துமம் எந்த நிலைமையிலிருந்ததென்றும், அடுத்ததைக் காட்டும் பளிங்குபோல், இப்புஸ்தகம் நமக்குக் காட்டுகின்றது. இதனை வாசிப்பது தேனினுமினிய இன்பத்தைத் தரும்.

ஆயினும், அர்ச். மோனிக்கம்மாளைவிட அதிக அபிமானத்தோடு அதை வாசித்தவர்கள் வேறுயாருமில்லை. அப்புஸ்தகம் அவளுக்குக் கொஞ்சம் சந்தோஷத்தையும் ஆறுதலையும் அளித்ததென்று நாம் நம்பிக்கையாய்ச் சொல்லக்கூடும். ஏனெனில் அவளுடைய திவ்ய உணர்ச்சிகளுக்கும் விசுவாசத்திற்கும் விரோதமான எவ்வித கொள்கையாவது அதிலிருந்ததில்லை. மேலும், அகுஸ்தீன் தான் இழந்துபோன விசுவாசத்தை, மற்றவர்களுடைய ஆத்துமங்களிலிருந்தும் வேரோடு எடுத்துவிடும்படியான நோக்கத்துடன் முற்காலங்களில் போதித்துவந்த எவ்வித தப்புப் போதனையும், அதில் கண்டிருந்ததில்லை. ஆதலால் அப்படிப்பட்ட உத்தமமான புஸ்தகத்தை யெழுதியவர், தன் ஆத்துமத்திற்குப் பரிபூரண திருப்தியளிக்க சக்தியுள்ள கடவுளுக்குத் தூரமாய், எப்போதைக்கும் இருப்பது கூடாமையென்று மோனிக்கம்மாள் கண்டிப்பாய் நம்பி, ஒரு தாயுடைய இருதயத்துக்குரிய அதிசய இயற்கை யுணர்வோடு, அதன் பாஷாலங்காரத்தையும், அவதானப் பெருமையையும், உணர்ச்சியின் நிஷ்களங்கத்தையும் மெச்சிக் கொள்ளவில்லையென்று யார் சொல்லக்கூடும்?

ஆனல் இந்த விஷயத்தில் நாம் எதையும் திட்டமாய்ச் சொல்லவேண்டிய சாதனங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. விடியற்காலத்திற்குக் கட்டியக்காரனைப்போல் தோன்றி ஜெகஜோதியாய்ப் பிரகாசிக்கும் சூரிய வெளிச்சத்தின்முன், குளிர்ந்த கிரணங்களை வீசும் சந்திர வெளிச்சம் ஒன்றுமில்லாததாய்த் தோன்றுவதுபோல், நவமாய் அவரிடம் விளங்கிய புத்தி தீட்சண்யத்தின் முன், அவரது வாக்குச்சாதுரியத்தின் பிரதம தோற்றம், ஒன்றுமில்லாமையாய்த் தோன்றிற்று.

தன் சீவியகாலமெல்லாம் செய்யுள், கலைஞானம், முதலிய சிறந்த வித்தைகளைத் திருப்பித்திருப்பிப் படித்துவந்தார். இத்தோடுகூட கணிதசாஸ்திரம், சடத்துவ சாஸ்திரம், சோதிட சாஸ்திரம் முதலிய அருமையான சாஸ்திரங்களையும் அறிந்திருந்தார். "செய்வன திருந்தச் செய்" என்னும் நமது ஔவையார் வாக்குப்படி, அவர் எதைச்செய்தாலும் உற்சாகத்தோடு திருத்தமாய்ச் செய்வார். அவ்விதமான உற்சாகத்தோடேயே, மேற்படி கல்வி சாஸ்திரங்களையும் படித்துவந்தார். இவைகளைப் படிக்கும்போது, தனக்குத் தோன்றும் கஷ்டமான பிரசினங்களைத் தன் புத்தித்திறமையால் விளக்கிக்

கொள்வார். கணிதம், சித்திரம், கானம், சங்கீதம், செய்யுள், ஆகிய இவைகளுள் ஒன்றற்கொன்று இருக்கும் சம்பந்தத்தைக்கண்டு, மனக்கவர்ச்சிகொண்டார். இச்சம்பந்தத்தையும், இச்சாஸ்திரப்பயிற்சியினால் உண்டாகும் அத்தியந்த பிரயோஜனங்களையும் அபூர்வமான விவேகத்துடன் எடுத்துக்காட்டி, ஜனங்கள் இவ்வித்தைகளைக் கையாடிவருவது நலமென்று யாவரையும் தூண்டி யேவினார்.

மனேக்கிய பிரிவினை சபையின்மட்டில் அவருக்கு முதல்முதலாக சந்தேகத்தைப் பிறப்பித்தது சாஸ்திரமே. அதிலும் முக்கியமாய் சடசாஸ்திரமும் கணிதசாஸ்திரமுமே. இது நூதனமான விஷயந்தான். ஆனால் இது எப்படியாயிற்றென்று காட்டுவது சுலபம். சாஸ்திரப்பயிற்சியே கடைசியாய் அவரைக் கடவுள் பாரிசமாய்த் திருப்பும் என்று அவருடைய தாயார் முன்னுணர்ச்சிகொண்டு, எப்போதும் அப்பயிற்சியையே சாதனைசெய்யும்படியாய் அவரைத் தூண்டிவருவாள். அவள் அப்படித் தூண்டிவந்ததற்கும், இவர் மனந்திரும்பினதற்கும், சரியாயிற்று.

இது நடந்த விதம் எப்படியெனில், மனேக்கிய மதத்தை யேற்படுத்தின மனேஸ் என்பவன் கடவுளைப்பற்றியும் ஆத்துமத்தைப்பற்றியும் சில போதனைகளைப் போதித்துவந்தான். தப்பறையான அப்போதனைகளில், மனிதனின் கடைசிகதிக்கடுத்த பெரிய பிரசினங்களை, முழுதும் நவமான விதமாய் வியாக்கியானித்துக்காட்டியிருந்தபடியால், ஜனங்கள் நூதனப் பிரியத்தினால் தூண்டப்பட்டு, அவைகளில் மனக்கவர்ச்சிகொண்டார்கள். இப்போதனைகளுடன், நட்சத்திரங்களின் திக்கு திசைகளைப்பற்றியும், விசுவசங்கிராந்தியைப்பற்றியும், அயனச்சந்திகளைப்பற்றியும், கிரகணங்களைப்பற்றியும், இல்லாத கதைகளையெல்லாம் பொய்யும் புளுகுமாய்ச் சேர்த்து, யாவற்றையும் கடவுளே தனக்கு வெளிப்படுத்தினதாகச் சாதித்தான். இவ்வாறாக, வானசாஸ்திரத்திற்கடுத்த விஷயங்களையென்னத்திற்காக தன் வேத புஸ்தகத்தில் சேர்த்தானென்பது புலப்படவில்லை. அவ்விஷயங்கள் சோதிடசாஸ்திரம் என்னவென்று அறியாத மூடனால் எழுதப்பட்ட ஏதோ சில புராதனக் கிரந்தங்களிலிருந்துஎடுக்கப்பட்டனவாகையால், அநேகமாய்ச் சுத்த அபத்தமாயிருந்தன. வானசாஸ்திரத்தில் தேறி, எதையும் திட்டமாய் அவதானிக்கவல்ல உரோமசாஸ்திரிகளும் அங்ஙனமே அவைகளை யபத்தமென்று தீர்மானித்து, நிராகரித்துவந்தார்கள். இதை அகுஸ்தீன் கண்டு அதிசயமுற்றார். "தனக்குத் தெரியாத காரியங்களைப்பற்றி எழுத இவனுக்கு அவ்வளவு துணிகரத்தைக் கொடுத்தவன் யார்? இனி நான் எப்படி இவனை நம்புவேன்! மனுஷர்களால் கிரகிக்கக்கூடிய விஷயங்களிலேயே, இப்படிப்பட்ட தப்பறைகளை யான் காண்பேனேயாகில், அவர்களால் முழுதும் கிரகிக்கக்கூடாத ஞான விஷயங்களைப்பற்றி இவன் சொல்வதை யான் எப்படி நம்புவேன்?" என்பார்.

இப்படியாக, மனேக்கிய மதத்தைக் கொஞ்சம் கவனத்துடன் ஆராய்ந்துவருங்காலையில், அதன்மட்டில் அவருக்கு இனியில்லாத சந்தேகங்கள் பிறந்தன.

கொஞ்ச காலத்திற்குமுன் கார்த்தேஜ் நகரைப் பார்க்கவந்த ஹெல்பிதியூஸ் என்பவன், மனேக்கிய மதத்தை எதிர்த்துப் பேசினான். அம்மதத்தின் போதனைகள், ஒன்றற்கொன்று ஒவ்வாமையாயிருக்கின்றனவென்றும், அதன் பழய எற்பாட்டிலும் புதிய எற்பாட்டிலும் உள்ள சில வசனங்கள், ஒன்றற்கொன்று நேர்விரோதமாயிருக்கின்றனவென்றும், பிரசித்தமாய் எடுத்துக்காட்டினான். அவன் எடுத்துக்காட்டிய சந்தேகங்களை, அகுஸ்தீன் அப்போது கவனிக்காதபோதிலும், அவைகளை முற்றிலும் மறக்கவில்லை. இப்போது அவைகளெல்லாம் அவருடைய ஞாபகத்தில் வந்து, மனதில் ஊன்றி, அவரை வாதித்துவந்தன. பூர்வீக தத்துவசாஸ்திரங்கள் யாவும், எந்தக் கட்டிடத்தையும் ஸ்திரமாய்க்கட்ட, ஆதாரமாய் எற்றுக்கொள்ளக்கூடாத மணல் தரைக் கொப்பாயிருக்கிறபடியால், அவைகளின் உதவியால் எதையும் தீர்மானிக்கமுடியாதென்று ஐந்து வருஷங்களுக்குமுன் அவைகளை நிராகரித்துத் தள்ளிவிட்டார். சத்தியம் எங்கேயிருக்கும் என்று ஓய்வு ஒழிச்சலில்லாமல் தேடி, சலித்துப்போய், எக்கங்கொண்டிருக்கும் தன் மனதிற்கு, இளைப்பாற்றி கிடையாதோவென்று, ஆவல் கொண்டிருக்கும் இச்சமயத்தில், மனேக்கிய மதமும் அவருக்கு மோசம் செய்தது. அம்மதமானது ஒரு

இடத்தில் ஸ்திரமாயிருந்து, ஒரே நிலையாய் எரியும் தீபத்திற்கொத்திராமல், சீக்கிரத்தில் அணைந்துபோய், தன்னை நாடி வருபவனை அந்தகாரத்தில் விட்டுவிடும் ஒரு மங்கலான சிற்றொளிக்குச் சமானமாயிருந்தது.

அவர் சத்தியம் என்னும் தீபத்தைத் தேடியதும், மனச்சமாதானத்தை நாடியதும், மேலாங்கிஷத்திற்கடுத்த முகாந்தரங்களைப்பற்றிமாத்திரமல்ல, ஆனால் கீழாங்கிஷத்திற்கடுத்த காரணங்களைப்பற்றியுந்தான். தன் ஆசாபாசங்களுக்குப் பூரண சுதந்தரத்தை யளித்த மனேக்கிய பிரிவினைச் சபையின்மட்டில் சந்தோஷங்கொண்டு, அதிலேயே தன் விசுவாசத்தை நிலைநாட்டும்படி இயற்கையில் ஆசைகொண்டார். ஆனால் அதன் போதனைகளில் உண்டான சந்தேகங்களினால் வாதிக்கப்பட்டு, முன்போலவே மனச்சமாதானம் தப்பிப்போகுமோ என்னமோ தெரியவில்லையேயென்று பயந்து, சீக்கிரமாய் மனேக்கியர்களுடைய உதவியை நாடினார். அவர்களுள் திரக் கற்றவர்களிடத்தில்முதலாய், தனது சந்தேகங்களைத் தெரிவித்துக்கொண்டும், வீணாயிற்று. ஒன்றையும் நிவர்த்திசெய்ய அவர்களால் முடியவில்லை. அவர்கள் புறமதஸ்தர்களுடைய போதனைகளை வாக்குச் சாதுரியத்துடன் தாக்கி எதிர்க்க திராணியுள்ளவர்களாயிருப்பார்களேயொழிய, தங்கள் போதனைகளுக்குண்டான ஆதார நியாயங்களை யெடுத்துக்காட்டி அவைகளை ஸ்தாபிக்க அவர்களால் ஏலாது. சமர்த்துள்ள வேடர்கள் ஒரு ஊற்றண்டை தங்கள் வலைகளை விரித்து வைத்து, அருகிலிருக்கும் மற்ற ஊற்றுகளுக்குத் தாகங்கொண்ட பட்சிகள் போகாதபடி, அவைகளையெல்லாம் இலை தழைகளால் மூடிவிட்டு, தாங்கள் வலை விரித்துவைத்திருக்கும் ஊற்றுக்குப் பட்சிகள் வந்தவுடன், அவைகளைச் சிக்கவைக்குமாப்போல், மனேக்கியர்களும் மற்ற மதபோதனைகளையெல்லாம் எங்குமில்லாமல் அடித்துத் தள்ளினால், தங்களுடைய போதனை உறுதிப்படுமென்று நம்பினார்கள்.

(இன்னும் வரும்.)

உன்னம்பிக்கையை முழுமையும் சேசுநாதருடைய பாடுகளிலேயும் தேவமாதாவினுடைய வேண்டுதலிலேயும் வைப்பாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

4-ம் அதிகாரம்; வசனம்—1–13.

நப தாண்டவராகிய சேசுநாதர் வனாந்தரத்தில் செபத்தியானம் செய்ததோடு நாற்பது இரவும், நாற்பது பகலுமாக உபவாசமாயிருந்தபின்பு பசாசு அவரைச் சோதிக்கத் துணிந்தது. ஆண்டவர் தம்முடைய சரீரத்தைக் கடினமாய் ஒடுக்கி ஒறுத்துவந்ததினால், அவர் மிகவும் இளைத்துக் களைத்துப்போகவே, பசாசு சோதனை செய்ய தனக்கு நல்ல சமயம் வாய்த்ததென்று இவர் சர்வேசுரனோ மனுஷனோவென்று அறிய பஞ்சக்கோலமணிந்த தவசியின் வேஷங்கொண்டு அவரிடம் முடுகிச்சென்றது. ஏனெனில் பசாசு அவரைச் சகல தருமிஷ்டரிலும் அதிக தருமிஷ்டரென்று அறிந்தாலும் தேவ சுதன் என்றறியாதிருந்தது.

சேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றபோது, "இவரே என் நேசகுமாரன், இவர் பேரில் நான் பூரண பிரியமாயிருக்கிறேன்" என்று யோர்தான் நதியில் பிதாவாகிய சர்வேசுரன் வசனித்த வாக்கியத்தைப் பசாசு கேட்டிருந்தாலும், தேவ இஷ்டப்பிரசாதம் நிறைந்த சுத்த மனுஷன் தேவ புத்திரனென்று சொல்லப்படுகிறபிரகாரம் புத்திரனோ, அவருடைய சுபாவமுள்ள சொந்தக் குமாரனோவென்றறியாமல், அவர் பசியினால் படுகிற வேதனையை அறிந்து சோதிக்க மனந்துணிந்து மனுஷரூபமாய்த் தெரிபட்டு சேசுநாதரிடம் அணுகிவந்து: "நீர் இத்தனை நாட்களாய்க் கொடிய தவஞ்செய்தீரே, இத்தனை நாட்களாய் இராப்பகலாய் நித்திரையில்லாமல் செபத்தியானத்தில் பரவசமாயிருந்தீரே, நீர் மகத்தான அர்ச்சியசிஷ்டவர், உத்தம தருமிஷ்டர், உம்மைப்போல் யாரும் இவ்வாறு தவஞ்செய்ததை நான் கண்டதில்லை. புண்ணியசீலர்களுக்கு புதுமைகள் செய்வது இயல்பாம். உமக்குப்

புதுமை செய்யும் வரம் உண்டே. நீர் தேவ சுதனுனல் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்று அவர் தம்முடைய திவ்ய பிதாவின் சித்தத்தின் பிரகாரமல்ல, அதற்குக் கீழ்ப்படியாமல் தமது சுய விருப்பத்தின்படி நடந்துகொள்ள பசாசு சோதித்தது. அதற்குச் சேசுநாதர் மாறுத்தாரமாக, "மனுஷன் அப்பத்தினுலே மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய எந்த வாக்கியத்தினுலும் பிழைக்கிறுன் என்று எழுதப்பட்டிருக்கிறது" என்றுர். அதாவது: மனுஷனுடைய உயிர் காப்பாற்றப்படுகிறது அப்பத்தினுல்மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய சித்தமானுல் மற்ற எந்த விதத்தாலும் காப்பாற்றப்படலாம் என்பதாம். "மனிதன் சர்வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றினுல், அவருடைய பாராமரிப்பில் தன் நம்பிக்கையெல்லாம் வைத்துவந்தால், மனுஷனுடைய சீவியத்துக்குத் தேவையானதெல்லாம் அவர் கொடுப்பார். புதுமை செய்ய வேண்டியது அவசியமல்ல. இப்போது நாம் பசியால் வருந்தவேண்டுமென்பது தேவ சித்தமானுல், அவர் நம்முடைய உயிரை வேறே எந்த விதத்தாலும் காப்பாற்றலாம்" என்று வேத வாக்கியத்தை உரைத்து தேவ பராமரிப்பில் வைத்த அணைகடந்த நம்பிக்கையோடும், பூரண தாழ்ச்சியோடும் பசாசின் சோதனையை ஜெயித்தார்.

பின்பு பசாசு அவரைத் அந்த வனந்தரத்திலுள்ள மிகவும் உயர்ந்த பர்வதத்தின் மேல் கொண்டுபோய், ஒரு க்ஷணப்பொழுதில் உலக இராச்சியங்கள் எல்லாவற்றையும், அவைகளின் மகிமை, சிறப்பு, சொகுசு, செல்வாக்கு, சிங்கார அலங்கார மகத்துவ பெருமைகளையும், சம்பத்து செல்வங்களையும், இன்ப சுகபோகங்களையும் அணியணியாய், மாய காட்சியாய், அவருடைய கண்களுக்குமுன் வைத்து, "இவைகளெல்லாம் எனக்குச் சொந்தம், பூலோகத்தின் அதிபதி நான்; இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன், என்னைச் சாஷ்டாங்கமாய் விழுந்து ஆராதியும்" என்று சர்வேசுரன் ஒருவருக்கே செலுத்தவேண்டிய தேவாராதனையைத் தனக்குச்செலுத்தும்படிசோதித்தது. அதற்குச் சேசுநாதர், அதினுடைய தந்திர கபட மாய்கையின் வலையில் அகப்படாமல், "சாத்தானே அப்பாலே போ, உன் தேவனுகிய கர்த்தரை ஆராதித்து, அவர் ஒருவரையே சேவிப்பாயாகவென்று எழுதியிருக்கிறது" என்று மறுபடியும் தேவ வாக்கியத்தை மொழிந்து, பசாசைக் கடிந்து ஓட்டிவிட்டார்.

பிறகு பசாசு, ஆண்டவர் தேவ பாராமரிப்பில் தப்பான மிதமிஞ்சின நம்பிக்கை வைத்து ஆங்காரம் கொள்ளும்படி மறுபடியும் சோதனை செய்தது.

அவரை எருசலேம் நகருக்குக் கொண்டுபோய், தேவாலயத்தின் சிகரத்தின்மேல் அவரை நிறுத்தி, நீர் தேவ சுதனுனல் இங்கிருந்து கீழே குதியும், ஏனெனில் உம்மைக் காப்பாற்றும்பொருட்டு அவர் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிட்டிருக்கிறுர் என்றும், உமது பாதம் ஒரு வேளை கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கரங்களிலே உம்மை ஏந்திக்கொள்வார்களென்றும் எழுதப்பட்டிருக்கிறது என்றது. அதாவது "உம்மை மெஸ்ஸியாஸ் என்றும், இஸ்ராயேல் அரசர் என்றும் எல்லோரும் உம்மை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள நான் நல்ல உபாயம் ஒன்று சொல்லுகிறேன். இதோ! ஜெருசலேம் பட்டணத்தில் இந்தச் சிறப்பலங்காரம்பெற்ற ஆலயத்தின் உச்சியிலிருந்து நீர் கீழே குதித்தால் சம்மனசுக்கள் உம்மை தங்கள் கரங்களில் ஏந்தி தேவாலயத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். அங்கே, யூத குருக்களும், ஜனங்களும் நீர் பரலோகத்தினின்றிறங்கின மெஸ்ஸியாஸ் அரசன், என்று உம்மை வாழ்த்தி ஸ்துதித்து உடனே தங்களுடைய ராஜாவாக மகிமையோடு ஏற்றுக்கொள்ளுவார்கள். உடனே இச்சங்கதி எங்கும் பிரபல்லியமாகும். உம்முடைய இராச்சியத்தைச் சுலபமாய் எங்கும் ஸ்தாபிக்கலாம்" என்றுசேசுநாதரை வீண் பெருமையால் சோதித்தது என்பதாம். அதற்கு நமதாண்டவர் பிரதிவாதித்து "சர்வேசுரன் பேரில் நம்பிக்கைவைக்கவேண்டும்! ஆனுல் அவசரமில்லாமல் தன்னை ஆபத்தில் உட்படுத்தி வீண் நம்பிக்கைவைத்து, வீண் பெருமையால் அவருடைய ஒத்தாசையைப் புதுமையால் எதிர் பார்ப்பது தகாது" என்று உன் கர்த்தாவான சர்வேசுரனைச் சோதியாதேயென்று வேதத்தில் எழுதியிருக்கிறதை உரைத்து மூன்றும் விசையும் ஜெயித்தார்.

பசாசு மும்முறையும் வெல்லப்பட்டு, வெட்கி நாணி முகங்கவிழ்ந்து, ஓடி மறைந்

தது. உடனே அந்த வனாந்தரம் ஓர் மோக்ஷம் போல் மாறினது. ஓர் பிராணியும் இல்லாத அந்தக் காட்டில் சம்மனசுக்கள் அணியணியாய் வந்து நமது தேவ ஆண்டவரைச் சூழ்ந்துகொண்டார்கள். தேவ ஸ்தோத்திர கீர்த்தனைகளையும் மெஸ்ஸியாவைப்பற்றி சங்கீதங்களையும் இன்புற்று அன்புற்று பாடினார்கள். சேசுவைப்போற்றிப் புகழ்ந்து வியந்து வாழ்த்தி ஆராதித்தார்கள். மிகவும் ருசிகரமான வானலோக உணவைக் கொண்டுவந்து ஆண்டவருக்குக் கொடுத்து அவருடைய பசியையும் களையையும் ஆற்றினார்கள். அவருக்கு சகலத்திலும் பணிந்து பணிவிடை செய்து அவரை கண்ணியப்படுத்தினார்கள்.

(தொடரும்.)

S. M.

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—1.

சேபஸ்தியானும் பென்தாவீதும்.

(முன் தொடர்ச்சி.)

"ஆயிரம்பேர் வலதுபக்கத்திலும், பதினாயிரம் பேர் இடதுபக்கத்திலும் வந்து உம்மை எதிர்த்த போதிலும், எதிரிகள் உம்மை வெல்லமுடியாது; ஏனெனில் கடவுள் உம்மைத் தமது சம்மனசுக்களின் பாதுகாவலில் வைத்திருக்கிறார்; அவர்கள் உம்மை எல்லா வழிகளிலுங் காத்து நடத்துவார்கள்" என்று யூதன் வெகு பயபக்தியுடன் மொழிந்தான். அவன் தேகத்தில் பயத்தால் உண்டான நடுக்கம் இன்னும் நின்றிலது.

வீரன்.—யூதா, நீ சொன்னது சரியே. சர்வேசுரனுடைய சம்மனசுக்கள் நமக்கு வந்துதவினர் என்பது திண்ணம். ஆனால் உன்னைக் காட்டில் தாக்கிய பாதகப்பயல்கள் இவர்கள்தானா?

யூதன்.—ஆம், ஆண்டவனே, இவர்கள் தாம்.

வீரன்.—"இந்தக் கான்யாற்றைக் கடந்து இவர்கள் வேறு வழி கண்டுபிடித்திருப்பதாகத் தெரிகிறது! கள்ளப்பயல்கள்! எதிர் நின்று சண்டைசெய்வதற்குப் பதிலாய், பூனையைப் போல் பதுங்கிவந்து, ஏமாந்த சமயத்தில் ஜனங்களை அடித்து இம்சிப்பது ஆண்தன்மையோ? அந்தோ! என் பேதை அருளா!" என்று சாகக் கிடக்கும் தன் நேசக் குதிரையின் பக்கம் மிக்க விசனத்தோடு திரும்பிப் பார்த்தவண்ணம், "உனக்கும் இத்தகைய மரணமா சம்பவிக்க வேண்டும்? கள்ளர் மறைந்திருந் தெய்யும் அம்புக்கிரையாவதல்ல, உனக்குரித்தான மரணம்! ஆனால் யுத்தக்களத்தில் போர்புரிகையில்; சுத்த வீரர் விடும் கணைக் கிலக்காய் மடிந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்!" என்று மிக்க உருக்கமாய்ப் பேசினான்.

இதற்கிடையில் யூதன் கலைந்திருந்த தன் வஸ்திரத்தைச் சரிப்படுத்திக்கொள்பவன்போல் தன்னுடன் இருப்பவன் பார்க்காவண்ணம் வெகு ஜாக்கிரதையாய்த் தன் பணப்பையை உடைக்குள் மறைத்து இடுப்பிற் கட்டினான். வீரன் இந்த முன்ஜாக்கிரதையைக் கவனிக்காமலிருக்கவில்லை. குதிரையை யிழந்ததால் அச்சமயம் உண்டான வருத்தத்தையும் பாராமல், யூதனுடைய செய்கையில், மனதைச் செலுத்தி, அவனை யிகழ்ச்சியாய் நோக்குபவன்போல் புன்னகைபுரிந்தான்.

"ஓர் யூதன் எப்பவும் யூதனே! எக்காலத்திலும், எவ்விடத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் யூதன் யூதனாகவே நடப்பான்" என்று இளைஞனாகிய அவ்வீரன் மொழிந்து, தரையில் விழுந்துகிடந்த சில பொன்னாணயங்களை தன் கால் விரலால் சுட்டிக்காட்டி, "அந்தக் கள்ளர் வேட்டைநாய்களைப்போல் உன்னைத் துரத்திவந்ததோர் ஆச்சரியமல்ல. உன் மடியில் கனமிருக்கிறதென்று அவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்" என்றான்.

இந்த வார்த்தைகளால் யூதன் ஒருவாறு கலக்கமடைந்தான். "நான் ஏன் மறைக்க வேண்டும்? என்னிடத்தில் பணமிருப்பது வாஸ்தவந்தான், அதுவும் ஏராளமான தொகை! நான் கோட்டைக்கு நகைகளும் வயிரங்களும் வாங்கப்

போவதால், கட்டாயம் பெருந் தொகை கொண்டுபோகவேண்டியவனு யிருக்கிறேன்" என்று மறுமொழி பகர்ந்தான்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே, யூதன் தன்னிடைக் கச்சையை யவிழ்த்து, பொன்னுணயங்கள் நிறைந்த தன் பணப்பையைக் காட்டினுன். பின்னர் அவன் வீரன் பாதங்களில் விழுந்து சொன்னதாவது: "மகாப்பிரபூ! நீர் இன்றைக்கு இரண்டு தடவை என்னுயிரைக் காப்பாற்றினீர்; இந்தப் பணத்தில் உமக்கு வேண்டியமட்டும் எடுத்துக்கொள்ளும்; வேண்டுமானுல் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளும்; இது போதாதென்ருல், உம்முடைய விருப்பத்தை எனக்குத் தெரிவிக்கவேண்டியதே தாமதம், பென்தாவீது தன்னுலான பிரயாசையெல்லாம்பட்டு உம்மைத் திருப்திசெய்வான். ஏனெனில் அவனை யின்று பொங்கி யெழும் அலைகளினின்றும், அந்தக் குரூர திருடர் கைகளினின்றும் காப்பாற்றியதுமன்றி, அவனைமுன்னிட்டு உம்முடைய சிறந்த போர்க்குதிரையையும் இழந்தீர்" என்ருன்.

வீரன்.—"நான் அப்படிச் செய்வதால், உனக்கு வரும் லாபம் என்ன? திருடர் கொண்டுபோனுலும், நான் எடுத்துக்கொண்டாலும், எல்லாம் உனக்கொன்றுதான். இல்லை, உன் பணம் யாருக்கு வேண்டும்? மேலும் பரோபகாரமே தங் கடமையாய்க்கொண்டுள்ள வீரனெருவன் தான் செய்த ஒரு நன்றிக்குப் பிரதி நன்றி எதிர்பார்ப்பதினும் கேவலம் வேறுண்டோ? உன் பணத்தை நீயே வைத்துக்கொள். கார்சியாஸ் பிரபுவின் குதிரைக்கொட்டகையில் வேண்டிய குதிரைகள் இருக்கின்றன. அவர் எனக்குரிய நல்லக் குதிரையொன்றை அளிக்கச் சற்றும் பின்வாங்கார் என்று நான் முன்னதாகவே நிச்சயமாய்ச் சொல்வேன்" என்று வெகு கம்பீரமாய் மொழிந்தான்.

"நான் கொடுப்பதை நீர் வேண்டாமென்று மறுப்பதால், ஆபிரகாமின் தேவனே உமக்கு சம்மானம் அளிப்பாராக!" என்று அந்த யூதன் தன் பணப்பையை வெகு ஜாக்கிரதையுடன் தன்னிடையிற் சுற்றிக் கட்டிக்கொண்டான். பின்னர், "நான் நினைத்தது தவறல்ல; நீரும் கார்சியாஸ் பிரபுவின் கோட்டைக்கே போகிறீர்போலும்! உமது அடிமையாகிய என்னையும் தங்கள் பாதுகாவலில், தங்கள் அடிச்சுவடுகளைப் பின்பற்றிவரும்படி உத்தரவளிக்க வேண்டுகிறேன். பயப்பீதியால் என்னிருதயம் நடுநடுங்குகிறது; ஏனெனில் இக்காட்டில் தோன்றும் ஒவ்வொரு புதாண்டையும், ஏழை யூதனை யெதிர்க்க ஒளுய்களைப்போல் திருடர் பதுங்கியிருக்கிருர்கள் என்றஞ்சுகிறேன்" என்ருன்.

"அப்படியேயாகட்டும். இன்று கள்ளரால் நேர்ந்த விபத்தைப்பற்றிக் கோட்டையில் ஒருவரிடமும் பேசாதே. மேலும் நீ எனக்கு அறிமுகமானவன்போல் காட்டிக்கொள்ளாதே" என்று வீரன் யூதனை யெச்சரித்தான்.

அப்படியே செய்வதாகச் சம்மதிப்பதுபோல், அந்த யூதன் மிகத் தாழ்மையாய்த் தலைவணங்கினுன். நமது வீரனும் இறந்துகிடந்த தன் குதிரையை மிக வருத்தத்துடன் சற்றேயுற்று நோக்கினுன். அக்குதிரை எத்தனையோ யுத்தக்களங்களில் தனக்குத் தோழனைப்போலிருந்து உதவி புரிந்தது அவன் ஞாபகத்துக்குவர, அவனுக்கு அச்சமயம் உண்டான மனவருத்தத்துக்கு அளவில்லை. தான் போகவேண்டிய மாளிகையை நோக்கி வேகமாய் நடந்தான். அவன் எவ்வளவு வேகமாய் நடந்தானென்ருல், பென்தாவீது என்னும் வயோதிப யூதன் அவனைப் பின்பற்றி நடக்கமுடியாமல் தவிக்கும்படி நேர்ந்தது.

இவ்வாறு அவ்விருவரும் நடக்கையில், மலைகள் தம் சிரங்களை வணங்குவதாகவும், அவற்றின் பெருந்தோற்றம் வரவரப் பார்ப்பதற்கு இரம்மியமாகவும் தோன்றின. இருமருங்கும் பசும்புல் அடர்ந்து வளர்ந்து, ஆங்காங்கு காட்டு மலர்கள் புஷ்பித்திருந்தன. சில இடங்களில் பாதைக்குமேல் பெரும்பாறைகள் நீட்டிக்கொண்டிருக்க, அவற்றில் பலவிதப் புஷ்பச்செடிகளும் கொடிகளும் வளர்ந்து, மலையிலிருந்த பெரிய மரங்களைத் தாவிப் படர்ந்து விளங்கின. இப்படி அடர்த்தியாய் வளர்ந்திருந்த மரங்களுக்கும் செடிகொடிகளுக்குமிடையில், சூரிய வெளிச்சம் ஊடுருவிச்செல்லவேண்டுமெனச் சச்சரவிடுவதுபோலிருந்தது.

வழிப்போக்கர் இருவரும் கடைசியாய் தம் பிரயாணத்தின் முடிவை யடைந்தனர் என்னலாம். ஏனெனில் பலமான கோட்டையென்று மிகப் பிராக்கியாதிபெற்றதும், குலப்பெருமையி

லும் வீரசூரப் பராக்கிரமத்திலும் தமக்கு நிகரானவர் எவருமில்லையென்னும் புகழ்வாய்ந்த பிரபுக்களைத் தனக்கு எஜமானராக உடையதுமாகிய கார்சியாஸ் பிரபுவின் சிறந்த மாளிகை கொஞ்ச தூரத்தில் புலப்பட்டது.

ஒரு மலை யுச்சியில் சிங்காரமாய்க் கட்டப்பட்டும், நாற்றிசையிலும் காவற்காரர் காவல்புரியுமாப்போல் உயர்ந்த மலைகளால் சூழப்பட்டும், அம்மாளிகை விளங்கிற்று. அக்கோட்டைக்கு முக்கிய அரணாய் விளங்கியவை: அதன் நான்கு மூலைகளிலும் கட்டப்பட்டிருந்த பெரிய கோபுரங்களும், அதைச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருந்த இரண்டு வரிசை பெருஞ் சுவர்களுமே. இவைகளைச் சுற்றிலும் மிக ஆழமான அகழிகளிருந்தன. அவ்வகழிகள் அநேகந்தடவைகளில் மகம்மதியரின் குருதியை யுண்டு அக்களிப்படைந்தனவென்றால், அக்கோட்டையின் பெருமையையும் பிரக்கியாதியையும்பற்றி வேறென்ன சொல்லக்கூடும்! மதில்களுக்கு வெளியில் விசாலமான திராட்சைதோட்டங்களும், ஒலிவ் மரங்கள் நிறைந்த தோப்புகளும் எங்கும் பரந்து விளங்கின. மாளிகைக்குப் பின்பக்கம் ஒரு மைதானமும் அம்மைதானத்தில் கோதுமை முதலிய தானியங்கள் பயிரிடப்பட்டும் இருந்தது. இந்தச் செழிப்பான சிறந்த பிரதேசத்தில், ஆங்காங்கு கோட்டையைச்சேர்ந்த அநேக குடியானவர்களின் வீடுகள் அழகாய் அமைக்கப்பெற்றிருந்தன. அந்தச் சிறந்த பூமியைச்சுற்றிலும் மரங்களும் மிருகங்களும் நிறைந்த பெருங் காடுகளிருந்தபடியால், மாளிகையிலுள்ளவர்களுக்கு அடுப்புக்கு விறகும், வேட்டைக்கு வேண்டிய மிருகாதிகளும் ஏராளமாய்க் கிடைத்தன.

அதிகாரம்—2.

கார்சியாஸ் பிரபுவும் அவர் மனைவியும்.

மாளிகையைக் கண்டதும் நமது இளைஞன் முகம் மலர்ந்தது. அப்படி அவன் முகமலர்ந்ததின் காரணம், அவன் மனதில் உதித்த இன்பத்துக்குரிய பல பழைய ஞாபகங்களே என, அம்முகத்தை நோக்கினோர் தெரிந்துகொள்ளலாம். அவ் வீரனும் தன் வேகத்தை இருமடங்காக்கி, மிக்கத் தீவிரமாய் நடந்துசென்று, தனக்கும் மாளிகைக்கும் மத்தியிலுள்ள இரண்டொரு மைல்தூரத்தைக் கூடிய சீக்கிரம் கடந்துசெல்ல முயன்றான். ஆனால் அவன் மாளிகையை நெருங்கிப் போகப்போக, அவன் முகமலர்ச்சி குறைந்து, அவன் மனதில் தன்னையுமறியாமல் ஏதோ துக்கக் குறிகள் தோன்றுவனபோல் அவனுக்குப் புலப்பட்டது. அத்துக்கக் குறிகளை யகற்ற அவன் என்ன முயன்றும் பயன்படவில்லை.

கோட்டையை யணுகியதும் வழக்கம்போல் தன் ஊதுகுழலை எடுத்தூதினன். கோபுர காவலன் அக்குழலோசைக்குப் பதில் அளிப்பவன் போல் தன் குழலை யெடுத்தூதினன். அப்பதிலோசையிலும் துக்கக் குறிகள் கலந்திருப்பது போல் தோன்றிற்று. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இழுவை பாலம் விடப்பட்டது. நமது வீரனும் அவனுடன் வந்த யூதனும் உள்ளே பிரவேசித்தார்கள். ஆனால் அவன் எதிர்பாராதவிதமாய் மதிலின் உட்புறமிருந்த முற்றம் எங்கும் நிசப்தமாயும் மனிதசஞ்சாரமின்றியும் இருப்பதாகத் தோன்றிற்று. எட்டு வருஷங்களுக்குமுன் அவன் இங்கே வந்திருந்தபோது பார்த்ததற்கும், இப்போது காண்பதற்கும் எவ்வளவு பாரதூர வித்தியாசம்! அப்போது கார்சியாஸ் பிரபு மூரிய ஜாதியார்பேரில் படையெடுத்துச்சென்றார். அவரோடு சேர்வதற்கே நமது செபஸ்தியான் பிரபு வந்தது. அக்காலத்தில் எங்கே பார்த்தாலும் கிளர்ச்சி மிகுந்து, பலபேர், பலவித வேலைகளைப் பரபரப்பாய்ச் செய்துகொண்டிருந்தார்கள். போர்வீரர் யுத்தப்பயிற்சி ஆங்காங்கு செய்து கொண்டிருந்தனர்; வேலைக்காரர் தம் எஜமானரின் போர்க்குதிரைகளைக் கையிற் பிடித்துக் கொண்டு, அம்முற்றத்தில் குழுமியிருந்தனர். வேட்டைக்காரர் வேட்டைநாய்களுடன் வந்து கூடி ஒரு பக்கம் நின்றுகொண்டிருந்தனர். வேலையாட்கள் அங்குமிங்கும் ஓடி, வந்த விருந்தினரை விசாரித்துக்கொண்டிருந்தனர். மாளிகையின் மேற்பாகத்தில் கார்சியாஸ் பிரபுவுக்குப் பிரியமான பல பாடல்களை வாத்தியங்களுடன் பாடகர் பாடிக்கொண்டிருந்தனர். ஆனால் இப்பொழுதோ எங்கும் நிசப்தமாயிருந்தது; எங்கும் துக்கமயமாகவே தோன்றிற்று. அக்கோட்டை முழுவதும் துக்கமென்னும் போர்வையால் மூடப்பட்டதுபோலிருந்தது. நமது வீரன்முன் வந்து நின்ற இராயப்பன் என்னும் வேலைக்காரனுடைய முகமும், அம்மாளிகையில் குடிகொண்டி

ருந்த துக்கத்தையே காட்டிற்று. அவன் தலை மயிர் முற்றும் நரைத்து, முகம் வருத்தத்தால் வெளுத்து குழிவிழுந்து, பார்ப்பதற்கு வெகு பரிதாபகரமாயிருந்தது.

செபஸ்தியான் அவனைப் பார்த்ததும் தன் மனதிலெழுந்த பயத்தையுந் துக்கத்தையும் அடக்கமுடியாமல், வேலைக்காரன் செய்த வந்தனத்தையுங் கவனியாமல், "ஏ! இராயப்பா! இங்கு என்ன சம்பவித்தது? ஏன் இப்படி எல்லாம் பாழடைந்துகிடக்கின்றது? என்ன சங்கதி? இது கார்சியாஸ் பிரபுவின் மாளிகைதானா?" என்று வெகு ஆத்திரத்துடன் கேட்டான்.

இராயப்பன் எப்படியாவது வந்த பிரபுவை முகமலர்ச்சியுடன் வரவேற்கவேண்டுமென முயன்றும் முடியாமல், "ஐயோ, பிரபுவே! என்ன சொல்லப்போகிறேன்! துக்க துயரங்கள் யாவும் ஒன்றுகூடி இம்மாளிகைக்குள் பிரவேசித்துவிட்டன. மனம் நொந்து வாடாத ஆத்துமா இங்கே ஒருவருமே கிடையாது" என்று பேச முடியாமல் அரையுங்குறையுமாய் நாக்குழறப் பேசினான்.

"ஆ! என்ன சொன்னாய்? நீ சொன்னது எனக்குத் திகிலை யுண்டுபண்ணுகிறது! என்ன நேர்ந்தது? உடனே சொல்."

"கார்சியாஸ் பிரபு......"

"ஆ! அவருக்கென்ன? இறந்தனரோ?"

"இல்லை, இல்லை, அவர் சாகவில்லை. ஆனால் ......"

"தேவன் ஸ்துதிக்கப்படுவாராக! இராயப்பா, என்னை உடனே அவரிடம் அழைத்துக் கொண்டுபோ."

"அவரிடம் போகவேண்டுமானால் டொலிடோவுக்குத்தான் போகவேண்டும்; ஏனெனில் அந்நகரில் ஆல்டிமன் அரசனுடைய சிறைச்சாலையில் அவர் அடைக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்."

இவ்வார்த்தைகளைக் கேட்டதும், வீரன் திடுக்கிட்டான்; ஐயோவென்று அலறினான்; தன்னை யறியாமலே அவனுக்குத் துக்கமேவிட்டு, திடீரென இரத்தம் இருதயத்தை நோக்கிப் பாய, அவன் முகம் சவத்தைப்போல் வெளுத்தது. கார்சியாஸ் பிரபுவும், செபஸ்தியானும் வெகு காலத்திய சிநேகிதர். அவர்கள் ஒருவர் ஒருவர்மேல் அத்தியந்த விசுவாசம் வைத்து நட்புரிமை பாராட்டிவந்தவர்கள். நம திளைஞன் கார்சியாஸ் பிரபுவைத் தன் தந்தையாகப் பாவித்து அவரை மிக்க விசுவாசத்துடன் நேசித்துவந்தான். அவர் விஷயத்தில் அவனுக்கு மரியாதை அதிகம். தன் தாய் தந்தையர் அகால மரணமடைந்தபின், கார்சியாஸ் பிரபுதான் அவனைத் தன் குழந்தையைப்போல் சீராட்டி வளர்த்துவந்தவர்; அவனுடைய அந்தஸ்துக்குத் தகுந்த கல்விப்பயிற்சி முதலியன அவனுக்குக் காலாகாலத்தில் செய்துவைத்து, அவனை அந்நாட்டில் ஒரு சிறந்த வீரனாக்கியதும் அவரே. தேவ பயத்திலும் சன்மார்க்கத்திலும் அவனைப் பழக்கினவரும் அவரே. அவன் பாலியப்பருவம் நீங்கி, மனிதனாகியபோது, கார்சியாஸ் பிரபு அவனுடைய உற்ற நண்பராயிருந்துவந்தனர். செபஸ்தியான் எப்போதும் எல்லாக் கஷ்டத்திலும், தனக்குற்ற நண்பர் ஒருவர் இருக்கிறார் என்று ஆவலுடன் நாடிச் செல்வது கார்சியாஸ் பிரபுவினிடமே; அப்படி அவன் போகுங்காலத்தில் அப்பிரபுவிடம் தனக்கு வேண்டிய உதவி ஆறுதல் நல்லாலோசனை இவைகளைப் பெறாமல் மீள்வதில்லை.

"இராயப்பா" என்று வேலைக்காரன் கையைப் பிடித்துக் குலுக்கி, "எல்லா சங்கதிகளையும் விபரமாய் என்னிடம் சொல். ஒன்றும் ஒளிக்காதே. நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஏதாவது மறைத்தாயோ, என் சஞ்சலந்தான் அதிகரிக்கும்" என்றான் நம்மிளவல்.

"காஸ்டைல் அரசனுக்கும், டோலிடோ அரசனுக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது தங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்; அதன்படி ஆறு மாதங்களுக்கு இருதாத்தாருக்குள்ளும் சண்டையில்லையாம். இவ்வுடன்படிக்கை நடந்த சில தினங்களுக்குப்பின், இதை அறியாத எங்கள் எஜமானர் சில வீரருடன் ஆல்டிமனுடைய நாட்டெல்லைக்குட் புகுந்து ஏதோ சில விடங்களை வழக்கம்போல் சூறையிட்டாராம். எங்கள் எஜமான் தன்னாட்டுக்குள் நுழைய ஏற்பாடு செய்திருப்பதாய் முன்னதாகவே கேள்விப்பட்ட அந்த துஷ்ட அரசன் தன் சேனையின் பெரும் பகுதியைத் திரட்டி, அவருக்காகக் காத்திருந்து போர்புரிந்து சுலபமாய் வெற்றியடைந்

தான். எங்கள் பிரபுவின் சேனை சிறிதானமை யால், எதிரிகள் அதை அடியோடு அழித்துவிட்டனர். ஆயினும் பகைவன் படையில் மாண்டவர்களுக்குக் கணக்கில்லையாம். அவ்வளவு பராக்கிரமத்துடன் நம்மவர் சண்டைசெய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. எங்கள் எஜமானரின் வீரச்செயல் தங்களுக்குத் தெரியாததல்ல. அவரைப் பிடிக்கவேண்டுமென்பது ஆல்டிமனுடைய எண்ணம். அவர் அன்று நடந்த போரில் படுகாயம்பட்டிருந்தபோதிலும், சற்றுஞ்சலியாமல் தன் குதிரையைத் தட்டி எதிரியின் சேனைகள் மத்தியில் பாய்ந்து மிக்க உக்கிரமமாய் யுத்தம் செய்தார். கார்சியாஸ் பிரபுவை உயிருடன் பிடிக்க வேண்டுமென, அவரை எப்போதும் வெறுக்கும் பாதகனாகிய ஆல்டிமன் கட்டளையிட்டிருந்தான். படுகாயத்தால் பாதி உயிர்போனவர்போல் தள்ளாடிச் சண்டையிட்டிருந்த எங்கள் பிரபுவை எதிரிகள் கடைசியாய் பிடித்துவிட்டார்கள். அவரை டொலிடோ நகருக்குக் கொண்டுபோய், அங்கே அவரைப் பலவிதமாய் இம்சை செய்து கடைசியாய் நமது பரிசுத்த வேதத்தின் படுவிரோதியும் கிறீஸ்துவர்களைக் குரூரமாய் நடத்துபவனுமாகிய ஆல்டிமன் என்னும் பாதகனுடைய ஏவலால் சிறைச்சாலையில் அடைத்துவைத்திருக்கிறார்கள். இந்தத் துக்கத்துக்குரிய சம்பவத்தைக் கேள்விப்பட்ட எங்கள் எஜமாட்டியுடையவும் அவர்கள் இரு மக்களுடையவும் மனம் என்ன பாடுபட்டிருக்குமென்று தாங்களே யூகித்தறிந்து கொள்ளலாம். இப்போது ஆல்டிமன் மீட்புப் பணமாக பத்து லட்சம் வராகன் கொடுத்தால், அவரை விட்டுவிடுவதாகச் சொல்லுகிறான். இவ்வளவு பெருந் தொகை கொடுக்க எந்தப் பிரபுவால் முடியும்? காஸ்டைல் அரசன்கூட இத்தொகையைக் கொடுக்கமுடியாதென்றால், மற்றெவரால் இந்த அநியாயத்துக்குத் தக்கவாறு நடந்துகொள்ளக்கூடும்? இதற்கிடையில் எங்கள் எஜமாட்டி சும்மா இருக்கவில்லை. கடவுள் மேல் பாரத்தைப்போட்டு, தம்மிடமுள்ள விலையுயர்ந்த ஆடையாபரணங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் முதலிய யாவற்றையும் விற்றுத் தம் கணவனை எப்படியாவது மீட்பதெனத் தீர்மானித்து, மாளிகையிலுள்ளவற்றையெல்லாம் விற்றுக்கொண்டுவருகிறார்கள்.

(இன்னும் வரும்.) ச. சேல்வன்.

CRESPOORNDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

கருங்கண்ணி
அர்ச். அந்தோனியார் மஹோற்சவக் கோண்டாட்டம்.

சங். பத்திராதிபரே,

பதுவைப்பதியரான அர்ச். அந்தோனியார் திருவிழாவானது இவ்வூரில் 1920ஆம் மேமீ 25உ கொடியேற்றத்துடன் ஆரம்பித்து ஜூன்மீ 6உயோடு வெகு ஆடம்பரமாய் முடிவாயிற்று. கொடியேற்றஞ் செய்தது முதற்கொண்டு காலையில் பூசையும் மாலையில் பிரார்த்தனையும் அர்ச். அந்தோனியார் சுரூப ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டுவந்தது. பங்கு கிறீஸ்துவர்களில் சிலர் கோரிக்கொண்டபடி ஜூன்மீ 3, 4-ந் தேதிகளில் 5 தேர் சுற்றுப்பிரகாரம் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

கடைசி தினமாகிய ஜூன்மீ 6உ சனிக்கிழமை மாலை தேவாலயத்தை பொன்னிற துவச தோரணங்களாலும் பன்னிறச் சித்திர வேலைகளாலும் அலங்கரித்து, பலிபீடத்தை சுகந்த மலர் நிறைந்த மாலைகளாலும், பூக்கொத்துகளாலும், மெழுகுவத்திகளாலும், பட்டப்பகல் போல் பிரகாசிக்கும்படியாகச் சிறப்பித்து, 7½ மணிக்கு (Vespers) என்னும் மாலை ஆராதனை பாடப்பெற்றபின், சங். நொரோஞ சுவாமிகள் ஜெபத்தினால் அர்ச்சியசிஷ்டவர்கள் அடைந்த வல்லமையையும் அர்ச். அந்தோனியார் செய்த புதுமைகளையுங் குறித்து ஜனங்களுக்கு பக்தி விசுவாசத்தை ஊட்டுமாறு அருமையான ஒரு பிரசங்கஞ்செய்தார்.

9 மணிக்கு 5 தேர்களுக்கு முன்னால் தப்பட்டை, தாரை, பூரி, பாங்கா, தஞ்சாவூர் நாகசுரம், பாண்டுவாத்தியங்கள் முழங்க, தேர்களுக்கு இரு புறத்திலும் கிறீஸ்துவர்கள் அணிவகுத்துச் செல்ல, தேர்களுக்குப்பின்னால் சங். நொரோஞ சுவாமிகள் அர்ச். அந்தோனியார் சுரூபத்தை கையில் ஏந்திவர, கருங்கண்ணி Head-master, களத்திடர்கரை Head-master இவர்களால்

பயிற்றுவிக்கப்பட்ட பாடகர்களும், நாகப்பட்டணத்து பாடகர்களும் ஒன்று சேர்ந்து இலத்தின் பாடல்களையும், தமிழ் பாடல்களையும் பாடிக்கொண்டு செல்ல, வழி நெடுக பீரங்கிபோன்ற அதிர்வெடிகள் கிளம்ப, ஆகாயபாணங்கள், தீவட்டி, மத்தாப்பு, புரூஸ் இவைகளின் ஜோதிப் பிரகாசம் சுற்றிலும் எங்கும் பரவி ஜொலிக்க 10 மணிக்குமேல் தேர் சுற்றுப்பிரகார காட்சி முடிவாயிற்று.

10 மணிக்குமேல் கோவில் முற்பக்கத்திலுள்ள மைதானத்தில் பலவிதமான விளையாட்டுகள், புதைபாணங்கள், ஆகாயபாணங்கள், சைனுபாக்ஸ் என்னும் பலவித விசித்திரமான பாணவேடிக்கைகளும் நடந்தன. 11 மணிக்குமேல் பள்ளர் என்னும் ஓர் கூட்டத்தார் பெருங் கூட்டமாக கோவில் வெளி முற்றத்தில் ஒருங்கு கூட அவர்களில் முப்பது பேருக்கு அதிகமான ஸ்திரீகள் சூரிய வட்டம்போல் சூழ வளைந்து கொண்டு கும்மி அடிக்க ஆரம்பித்தார்கள். ஒரு ஸ்திரீ தலைவியாகவும் மற்றவர்கள் துணைவிகளாகவுமிருந்து சேசுநாதசுவாமி பிறப்பு முதற்கொண்டு பாடுகள்வரையில் கேட்போர் மனங் கசிந்துருக பாடினார்கள். இன்னொரு கூட்டத்தார் தேவதாயின் மகிமையையும், தேவதாய் செய்துவரும் எண்ணிக்கையில்லா புதுமைகளையும் அலங்கார நடையாய் அட்சரசுத்தமாக இனியகுரலுடன் பாடிமுடித்தார்கள்.

6வ ஞாயிறு காலை முதற் பூசை சங். மோதா வாஸ் பங்கு சுவாமிகளாலும், இரண்டாவது பூசை சங். பையஸ் சுவாமிகளாலும், மூன்றாவது பூசை சங். நொரொஞ சுவாமிகளால், சங். மோதா வாஸ் சுவாமிகளும், சங். பையஸ் சுவாமிகளும் டீக்ப்ன் சப்டீக்கனுக இருக்க, வெகு ஆடம்பரமாய் பாடப்பெற்றது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் திவ்ய சற்பிரசாதம் உட்கொண்டார்கள். பூசை முடிவில் திவ்யநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது.

சங். மோதா வாஸ் சுவாமிகள் தமது பங்கு கிறீஸ்தவர்கள்மட்டிலும், அந்நியர்மட்டிலும் அதிக அன்பும், பற்றுதலும்கொண்டு தளராவூக்கததுடன் உழைத்துவருகிறவராகையால் அவர் கருங்கண்ணிக்கு மாற்றப்பட்ட கொஞ்சகாலத்துக்குள் திருநாளுக்கென்று சுவாமிமார்கள் வந்திருப்பதற்கு மேல்மாடியும், அயல் கிராமங்களிலுருந்து வருகிறவர்கள் தங்க ஓர் நேர்த்தியான சத்திரமும், பள்ளிச்சிறுவர்களுக்கு கல்லூரியும் கட்டிமுடித்து, பூசையில் பாடுவதற்கு பாடகர்களையும் ஏற்படுத்தியிருக்கிறார். கருங்கண்ணியிலும் மற்றும் சுற்றுக்கிராமங்களிலும் சங். மோதா வாஸ் சுவாமிகளைப் போற்றிப் புகழாதவர்களில்லை.

இந்த நற்குணமுள்ள சுவாமிகள் எங்கே சென்றாலும் தங்கம்போல் பிரகாசிக்கவும், மங்காசுடர் விளக்குப்போல் சுடர்விட்டெரியவும், பக்தியும், நீடிய ஆயுளும், பூரண சுகமும் பெற்றுய்யவும் சர்வேசுரன் கிருபை புரிவாராக.

சென்னை, தேனும்பேட்டை,
21—6—1920. } C. V. P.

புதுக்கோட்டை.

சங்கைக்குரிய பத்திராதிபரவர்களுக்கு :—

ஜூன் மாத நல்லாயனில் Mr. S. M. ஞானப்பிரகாசம் அவர்கள் எழுதிய வியாசத்தைத் தழுவி சிறிது வார்த்தை இங்கு எழுதலானேன்.

கத்தோலிக்கு இந்தியரென்று அழைக்கப்படும் நம் கிறீஸ்துவ ஐக்கியத்தினரில் அநேகர் ஜாதியில் மேல், கீழ், என்ற விஷயமாய் நம் Mr. பிரகாசம் அவர்களைப்போல் அடிக்கடி பத்திரிகைகளில் எழுதவும் மேடைகளில் பேசவும் காண்கிறோம். இது நன்மையேயாயினும் அன்னோர் பிரதி பிரயோஜனமான பலன் பெறும் வகைகளை ஒரு சிறிதும் கையாளவில்லையேயென்பது கஸ்திக்குரியதாயிருக்கிறது. ஆகையால் Mr. பிரகாசம் தம் வியாசத்தின் கடைசியில் சொல்லுவதுபோல கல்வியையே இதற்கு ஆதாரமாகவைத்து நாம் பேசவேண்டியது. கல்வியை சூரியனுக்கொப்பாகவும் ஜாதி அபிமானங்களை காரிருளுக்கொப்பாகவும் நினைத்து சூரியனைக் கண்ட அந்தகாரம் எப்படிப் பறந்துபோகின்றதோ, அவ்வண்ணமே கல்வியின் மாணிக்க ஒளியாகிய சூரியன், தாழ்ந்த ஜாதியென்னும் இருளில் பட்டவுடனே அவ்விருள் எடுபட்டு பிரகாசிக்குமென்பதில் ஐயமில்லை. இது விஷயமாய் நினைக்கும்பொழுது நம்மிந்திய கிறீஸ்துவ தாழ்ந்த வகுப்பினர் செய்யும் பரிதாபத்துக்குரிய விஷயம் மனத்தைப் புண்ணாக்குகின்றது. கவர்ண்மெண்டாராலும், நமது சத்திய திருச்

சபையின் அதிகாரிகளாலும் எவ்வளவோ படிப்புக்குரிய சாதனங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தும் இவர்கள் அதை கைநழுவ விட்டுவிட்டு, கல்வி இலாக்கா அதிகாரிகளும், திருச்சபை அதிகாரிகளும் பள்ளிக்கூடம் காலியாயிருக்கிறதே, உபாத்தியாயருக்கு வீண் சம்பளம் கொடுக்க வேண்டியதாயிருக்கிறதே என்று அலறும்படி செய்துவிடுகிறார்கள். உலக முழுதும் கல்வி, கல்வி, என்று கதறும் இக்காலத்தில், படிப்பு, படிப்பு, என்று பதறும் இச்சமயத்தில் இந்தப் பாமரஜனங்கள் படிப்பைக் கவனியாமல் படுத்துக் கிடப்பதைப் பார்ப்பது பரிதாபத்துக்குரியதே. ஓர் மனுஷன் தன் சிநேகிதன் வீட்டுக்குப் போனவுடன் அவன் சுகக்ஷேமங்களை விசாரித்தபின் புத்திர சந்தான க்ஷேமத்தை விசாரிக்கிறான். புத்திரரில் ஆண்வயதென்ன? என்ன படிக்கிறானென்றும், பெண்வயதென்ன? என்ன படிக்கிறாளென்றும், கேட்பது வழக்கம். கல்யாணத்திற்குப் பெண் தேடப்போவோமானால், முதல் கேள்வி பையன் என்ன பாஸ்பண்ணியிருக்கிறானென்று கேட்டபின்தான், மற்ற சங்கதிகள் கேட்பது வழக்கமாயிருக்கிறது. பையன் நல்ல பாஸ்பண்ணியிருப்பானேயானால், பணங்கூட அவசரமில்லை; இதோ! பாரியாள், இழுத்துக் கொண்டுபோ என்று சொல்லும் காலம் வந்துவிட்டது. நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் ஜாதியைக் கவனியாமல் படிப்பையே கவனித்து உத்தியோகம் கொடுக்கும் வழக்கமும் ஏற்பட்டுவிட்டது. இப்படியிருக்க, ஏன் ஜாதியைப்பற்றி கவனிக்கவேண்டும். படிப்பையே கவனித்து அவர்களை முன்னேற்றவேண்டியது. படிப்பு இல்லாவிட்டால் அவர்கள் தம் தாழ்ந்த வழக்கங்களை விட்டுவிடமுடியாது. தாழ்ந்த வழக்கங்களை விட்டுவிடாதவரை மேன்பாடுள்ளவர்கள் அவர்களைத் தழுவமுடியாது. இது உலக இயல்பு, மனுஷ சுபாவம். ஆகையால் கல்வியானது அவர்களுக்கு உலகத்தில் பெருந்தன்மையாய் நடக்கவேண்டிய விதத்தையும், பெரிய மனுஷர்களோடு எவ்விதம் பேச, நடக்கவேண்டுமென்பதையும், எந்தெந்த தொழிலைக்கொண்டு மரியாதையான ஜீவியம் ஜீவிக்கலாமென்பதையும் கற்றுக்கொடுத்துவிடும். ஆகையால் Mr. பிரகாசம் அவர்களும் ஏனையோர்களும், நம் கத்தோலிக்கரில் எந்த ஜாதி, எந்த வர்ணமென்பதைப் பாராமல் எந்த வகுப்பினர் கல்வியைத் தளரவிட்டிருக்கின்றனரோ, அவ்வகுப்பினரைத் தூண்டி, கல்வியாலுண்டாகும் நன்மையைக் காட்டி படிப்பில் பிரியத்தை அவர்களுக்கு ஊட்டி அவர்களை முன்னேறும்படி செய்வதுதான் பரோபகாரமும் பிறர் சிநேகமுமாகும். படிப்பைக் கவனியாத நம்மவர்கள் சொல்லும் ஓர் முகாந்தரம் ஏதெனில், நாங்கள் ஏழைகள் எப்படி படிக்கமுடியும்? ஜீவிப்பதே கஷ்டமாயிருக்கிறதென்று சொல்லக்கூடும். சில சமயம் இது உண்மையாக இருக்கலாம். சகோதரர்களே! பிராமண அக்கிரஹாரங்களில் உள்ளே நுழைந்து பார்ப்போமானால் இராக்காலங்களில் தனியே தீபம் வைத்துப் படிக்க சக்தியில்லாத பையன்கள் 5, 6 பேர் சேர்ந்து ஓர் தீபம் வைத்துக் கொண்டு படிப்பதைப் பார்க்கலாம். இன்னும் சில எளிய பையன்கள் முனிசிப்பாலிட்டி லாந்தரில் படிக்கவும் காண்கிறோம். ஏன் நமது பிள்ளைகள் அப்படிச் செய்கிறதில்லை? ஏன் அந்த வித்தியாசம்? அவர்கள் படிப்பினால் உண்டாகும் நன்மையைக்கண்டு, இப்பொழுது கஷ்டப்பட்டால் பின்னால் நல்ல பதவி அடையலாமென்பதை உணர்ந்து அப்படிச் செய்கிறார்கள். ஏன் நாமும் நமது பிள்ளைகளும் அப்படிச் செய்யக்கூடாது? அப்படித்தான் செய்யவேண்டும். சகோதரர்களே! படிப்பைக் கவனியுங்கள். உலக ஜனசமூகத்தின்கண் படிப்பு அவசரம். நமது தென்னிந்தியாவிலுள்ள கிறீஸ்துவர்களில் 10ல் 8 பங்கு ஜனங்களுக்கு, உலகம் எப்படி அரசாளப்படுகிறதென்றும், நமது கவர்ன்மெண்டார் நம்மை எவ்விதம் நடத்துகிறார்களென்றும், புது அரசியல் முறை எப்படி நடத்தப்படப்போகிறதென்றும், அதில் நமக்கு எத்தனை ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அறியாமலிருக்கிறார்களென்றே சொல்லலாம். கல்வியிலும், உத்தியோகத்திலும், ஐஸ்வரியத்திலும் தேர்ந்த மேதாவிகளான நமது சகோதரர்கள் கவர்ன்மெண்டாரோடு போராடினதில் நமது அதிமிக காருண்ய கவர்ன்மெண்டார் நமக்கு 5 ஸ்தானங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆயினும் அது நமது ஜன சமூகத்தின் முன் போதாதென்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது. நாம் கல்வி விஷயத்தில் சம்பூரணமாயிருப்போமானால் இன்னும் அதிக உயர்ந்த பதவிகளை அடைய வழியாயி

ருக்கும். இதை விட்டுவிட்டு, நான் உயர்ந்த ஜாதி, நீ தாழ்ந்த ஜாதியென்றும், உயர்ந்த ஜாதியார் தாழ்ந்த ஜாதியாரைக் கவனிக்கவில்லை யென்றும் பேசுவதில் பிரயோஜனமில்லை.

5—6—1920. S. M. கஸ்மீர்.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும், குறிப்புக்களும்.

மின்சார ரெயில்வண்டி.—புகைரதம் எனப் பெயர்பூண்ட ரெயில்வண்டியை இனி மின்சார சக்தியால் ஓட்டுவதற்குவேண்டிய முயற்சி இங்கிலாந்தில் செய்யப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

பந்தயக் களத்துக்கு பத்தாயிரம்.—சென்னைக்கடுத்த கிண்டியிலுள்ள குதிரைப் பந்தயக்களத்தை விருத்திபண்ணுவதற்காக திருவாங்கூர் மஹாராஜா அவர்கள் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை யளித்திருக்கின்றனாராம்.

மெசபொட்டேமியா. — இப்போது மெசபொட்டேமியா பிராந்தியத்தில் 13,000 பிரிட்டிஷ் சைன்னியமும், 66,000 இந்தியர் சைன்னியமும் பந்தோபஸ்துக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் சவரட்சணைக்கு வாரத்துக்கு 475,000 பவுன் செலவாகிறது. இந்தச்செலவு இங்கிலாந்திலிருந்தே கொடுக்கப்படுகிறது.

கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள்.—சமீபத்தில் பிறப்பிக்கப்பட்ட கவர்ண்மெண்ட் உத்தரவால் இச்சென்னை ராஜதானியைச்சேர்ந்த சில ஜில்லாக்களில், கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஜனப் பிரதிநிதிகளாலான இப்பஞ்சாயத்து நியாயஸ்தலங்கள் பரீட்சார்த்தமாய் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இலங்கை அரசாட்சி.—இலங்கையானது, சென்னை இராஜதானியைச்சேர்ந்த ஒரு ஜில்லாவைப்போல், சென்னைக் கவர்னர் அவர்களின் அரசாட்சிக்குட்படவேண்டுமென்ற ஒரு பிரேரணை ஆலோசனையிலிருப்பதாக லண்டன் நகரத்துக் கடிதக்காரர் ஒருவர் தெரிவிக்கிறார். இந்தப் பிரேரணை இலங்கை வாசிகளிற் பெரும்பாலோரால் ஆமோதிக்கப்படவில்லையென்று சொல்லப்படுகின்றது.

குயீன் மேரிஸ் காலேஜ்.—பெண்களுக்கென்று தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ள குயீன் மேரிஸ் காலேஜிலிருந்து இவ்வருஷம் பீ. ஏ. பரீட்சைக்கும், இன்டர்மீடியட் பரீட்சைக்கும் போன 24 பெண்களில், 23 பேர் தேறினார்களென்றும், அவர்களில் கத்தோலிக்கர், முந்தின பரீட்சையில் நால்வரும், பிந்தின பரீட்சையில் ஐவருமாக ஒன்பது பேர் தேறியிருக்கிறார்களென்றும் கேட்டு சந்தோஷமானோம்.

இரண்டு ஸ்திரீ எம். ஏ. க்கள்.—சமீபத்தில் மைசூரில் நடைபெற்ற எம். ஏ. பரீட்சையில் இரண்டு மாதர்கள் தேறினார்கள். அவர்களில் ஒருவராகிய ஸ்ரீமதி கனகலட்சுமியம்மாள் என்பவர் வைதிக பிராமண வகுப்பைச் சேர்ந்தவராயிருந்தும், மைசூர் கவர்ண்மெண்டார் கொடுக்கும் வருஷாந்திர உபகாரச் சம்பளம் ரூ 3,000 பெற்றுக்கொண்டு கல்வி யபிவிருத்தியின்பொருட்டு இங்கிலாந்துக்குச் செல்லுகிறார்.

"புதிய டைப் ரைடிங் மெஷீன்".—சமீபத்தில் லண்டனில் நடந்த வியாபாரக் காட்சியில் மிஸ்டர் கர்டிஸ் என்பவர், ஒரு நிமிஷத்திற்கு 133 வார்த்தைகள் அச்சடிக்கக் கூடியதோர் புதிய டைப் ரைடிங் மெஷீனைச் செய்து வேலை செய்துகாட்டினார். இந்தப்படிக்கு ஒரு நாளைக்கு 40,000 வார்த்தைகளை அச்சடிக்கலாமாம். இயந்திரங்கள் நாளுக்கு நாள் விருத்தியடைந்துவருகின்றன.

தென் ஆபிரிக்காவிலுள்ள இந்தியர்கள்.—தென் ஆபிரிக்காவிலுள்ள இந்தியர்களை அந்நாட்டிலிருந்து வெளிப்படுத்துவதற்கு அந்நாட்டு அரசாங்கத்தினர் கப்பல்கள் ஏற்பாடு செய்கின்றனரென்று "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை நிருபரொருவர் தெரிவிக்கிறார்.

சென்னைத் தொழில் போர்டு.—தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படும் முறைப்பாடுகளைக் கேட்டு மத்தியஸ்தம் செய்வதற்கு ஏற்கெனவே மிஸ்டர் பாடிசன் ஐ. சி. எஸ். கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருப்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். இப்பொழுது உத்தியோகஸ்தரல்லாதார் அடங்கிய தொழில் போர்டு

என்னும் "ஆலோசனை சபை" யொன்று கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிறது. இச்சபைக்கு ஷேடி பாடிசன் துரையே அக்கிராசனராவார்.

உலகில் அகவிலை.—உலகிலுள்ள பல பிறதேசங்களில் அகவிலைகளைப்பற்றி காமன்ஸ் சபையில், கேள்வி கேட்டபோது, உணவுப்பொருள் அதிகாரி: "யுத்தத்திற்கு முன்னிருந்ததைக் காட்டிலும் யுத்தத்திற்குப்பின் அகவிலை 100க்கு பிரிட்டனில் 135 பங்கும், பிரான்சில் 220 பங்கும், இத்தலியில் 306 பங்கும், நார்வேயில் 194 பங்கும், சுவீடனில் 191 பங்கும் அதிகரித்திருப்பதாகவும், இந்தியாவில் சொற்பமே அகவிலையேறியிருப்பதாகவும் சொன்னார். இவர் சொல்லியதிலிருந்து மற்ற ஊர்களைவிட இந்தியா பாக்கியம்பெற்றதென்றே சொல்லவேண்டும்.

இலங்கையில் இந்திய கூலிகள்.—இந்தியாவிலிருந்து இலங்கைக்குச்சென்று அங்குள்ள சுமார் 2,000 தோட்டங்களில் தற்போது வேலை செய்துவரும் கூலிகளின் தொகை ஐந்து லட்சம் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. கூலி வேலை செய்து உயிர் பிழைக்கச் சென்ற இக்கூலியாட்கள் 6, 7 கோடி ரூபாய் கடன்பட்டிருக்கிறார்களாம். பிழைக்கப்போன இடத்தில் இப்படி கடன்காரர்களானால் இவர்கள் ஈடேறும் வகையென்னோ தெரியவில்லை. இக்கூலியாட்களின் நிலைமையை விவரமாய் அறிய விரும்புவோர், ஸ்ரீமான் க. ரு. சிதம்பரம் பிள்ளையால் எழுதப்பட்டு, கண்டி பெரிய கங்காணிமார் சங்கத்தால் வெளியிடப்பட்ட "இலங்கையில் இந்திய கூலிகளும், தோட்டக்காரர்களும்" என்னும் பெயர்கொண்ட புத்தகத்தை வாசித்துத் தெரிந்துகொள்ளலாம்.

கம்பியில்லா தந்திப்பேச்சு.—டெல்லகிராம் அடிக்கிறதுபோல யந்திரத்தில் செய்திகளை அடிக்க கம்பியில்லாமலே ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு சங்கதி தெரிந்துகொள்ளு முறைக்குக் கம்பியில்லாத தந்தியென்று சொல்லப்படுகிறது. ஆனால் இப்பொழுது ஒரு இடத்தில் பேசும் வாய்ப்பேச்சு அல்லது பாடும் பாட்டு மற்ற இடங்களுக்குக் கேட்கும்படியான வசதிகள் அமைக்கப்பட்ட புது இயந்திரமொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். செம்ஸ்போர்டிலுள்ள அத்தகைய இயந்திரத்தண்டை சமீபத்தில் மகாப் பிரசித்திபெற்ற மிஸர்ஸ் மெல்பா பாடினாரென்றும், அவர் பாடியது பெர்லின் முதலிய இதர இடங்களில் தெளிவாய்க் கேட்கப்பட்டதென்றும், பாரிசில் அப்பாட்டின் போனோகிராப் ரிக்கார்டு எடுக்கப்பட்டதென்றும், தந்திச் செய்தியொன்றால் தெரியவருகிறது.

சர்க்கரை கொடுக்கும் மரம்.—அமேரிக்காவிலுள்ள ஒருவித மரத்தூளில் சில ரசாயன வேலை செய்வதினால் சர்க்கரை உண்டாக்குங் வகையை ஒரு அமேரிக்க ரசாயன சாஸ்திரி கண்டுபிடித்திருக்கிறாராம். இம்முறையை மற்ற ரசாயன சாஸ்திர நிபுணர்கள் பரீட்சித்து காரியசித்தியுள்ளதென நிர்ணயித்தால் சர்க்கரை ஏராளமாய் பெறப்படுமெனவும், அதன் விலை ஒருவாறு குறையலாமெனவும் எதிர்பார்க்கலாம். அப்படிப்பட்ட பரிசோதனை நடந்துகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

திருடர்களின் யுக்தி.—அபின் என்னும் லாகிரி வஸ்துவை அயல்நாட்டிலிருந்து பிரிட்டிஷ் நாட்டுக்குள் அநுமதியின்றி சுங்கம் செலுத்தாமல் கொண்டுவரக்கூடாது. இதைச் சிலர் மோசத்தனமாக பலவித சூழ்ச்சி வழியாய்க் கொண்டுவந்து விற்று லாபம் அடைகிறார்கள். இம்மாதிரி சென்ற வருஷத்தில் 16 மணங்கு அபின் கள்ளத்தனமாய்க் கொண்டுவரக் கண்டுபிடிக்கப்பட்டது. ஒருவன் ஒரு வாத்தைக் கொன்று அதன் வயிறு நிறைய அபினைச் செலுத்தி செத்துப்போன வாத்தைக் கொண்டுபோகிற மாதிரி கொண்டுவந்தானும். இதை எவ்வாறோ சுங்கக்காரர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். இவ்விருதிறத்தினர்களில் திருடர்களின் யுக்தி பெரிதோ, துப்பறிவோர்களின் யுக்தி பெரிதோ எவர்களைப் புகழ்வது?

துருக்கிய வீரப்பெண்.—ஹலிட் எடிப் ஹானெம் என்னும் பெயர்கொண்ட ஒரு துருக்கிய மாது துருக்கியிலுள்ள தேசீயக் கட்சியைச் சேர்ந்தவள். இவள் ஆங்கிலம் நன்றாய்ப் பேசுகிறாள். இங்கிலாந்து பிரான்சு முதலிய ஐரோப்பிய நாடுகளில் சஞ்சாரஞ் செய்தவள். தேசத்துக்காக சலியாது உழைக்கும் ஊக்கங்கொண்டவள். பிறருக்கு ஊக்கமளிப்பதில் திறமைசாலி. சாமர்த்தியமான பிரசங்கி. தேசீய கட்சித் தலைவரான

முஸ்தபா காமல் பாதுஷாவுக்காக சமீபத்தில் ஒரு பட்சத்துக்குள் 12,000 பேருக்கு அதிகமான சேனையைச் சேர்த்துத் தந்தாள். இவளுடைய உற்சாகத்தையும், உழைப்பையும், சாமர்த்தியத்தையும் சாதுரியத்தையும் பார்க்குமளவில், இவள் ஒரு அற்புத மாதாகுமென "டேய்லி எக்ஸ்பிரஸ்" விசேஷ நிருபர் அறிவிக்கிறார்.

விவசாயக் கல்வி.—இதுவரையில் சென்னை விவசாய இலாகாவை விருத்தி பண்ணுவதற்குத் தக்க மாணவர்கள் போதுமான பேர்கள் கிடைக்கவில்லை யாதலினால், இது விஷயத்தில் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியில் இனி இன்டர் மீடியட் பரீட்சையில் பௌதிக சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவர்களே சேர்க்கப்படுவார்கள். நான்கு வருடகாலம் படிக்கவேண்டும். நாலாம் வருஷத்தில் அநுபோக முறையில் பழக்கப்படுவார்கள். பயிற்சியிலிருக்கும்போது மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். இறுதிப் பரீட்சையில் தேறியவர்கள் இலாக்காவில் நூறு ரூபாய் சம்பளத்தில் அமைக்கப்படுவார்கள். இந்தப் புதிய முறையில் விவசாய இலாக்கா விருத்தியடையுமென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் விவசாயக் கல்விக்குப் பட்டங்கள் ஏற்படுத்தினால் அக்கல்வி நன்றாய் விருத்தியடையும்.

வேல்ஸ் இளவரசர் விஜயம்.—மகா மேன்மைதங்கிய வேல்ஸ் இளவரசர் அடுத்த 1921ஆு ஜனவரி௴ 3-ம் தேதி காலை சென்னை ஹார்பரில் வந்து இறங்குவாரென்றும், அவருக்கு அன்று மாலை மன்ரோ சிலை மைதானத்தில் மிகச் சிறப்புடன் சென்னை இராஜதானிப் பொது ஜனங்களால் பகிரங்க நல்வரவோபசாரப் பத்திரம் வாசிக்கப்படுமென்றும், அடுத்த தினமாகிய ஜனவரி௴ 4-ம் தேதியன்று புதுச் சட்ட சபையைத் திறந்துவைப்பாரென்றும், அடுத்த தினங்களில், அரசாங்க மாளிகையில் பொதுவர்வேற்பு, பால்ஆட்டம், கிண்டியில் குதிரைப் பந்தயம், சென்ட் ஜியார்ஜ் கோட்டை விஜயம், டிராம்வேயிக்காக தற்போது விரிவாக்கப்பட்டுவரும் கவர்னர் வீட்டு வாராவதியின் ஆர்ச் என்னும் வில்மாடமொன்றுக்கு ஆப்புக் கல்லிடுதல், மெட்ராஸ் கிளப்பாராலும் காஸ்மோபாலிட்டன் கிளப்பாராலும் விருந்து கொண்டாட்டங்கள், இந்திய இராஜாக்களுக்குப் பேட்டி முதலிய வைபவங்கள் நடைபெறுமென்றும் ஜனவரி௴ 6-ம் தேதியாகிய வியாழக்கிழமை சென்னையைவிட்டுப் புறப்படுவார் என்றுந் தெரியவருகிறது.

ஸ்ரீமான் ரரவ்சாகேப் குருஸ் பெர்னான்டஸ் அவர்கள்.—இவ்வருஷம் நமது சக்கரவர்த்தி ஜனன தின கௌரவப் பட்டங்களின் ஜாபிதாவில் நமது கத்தோலிக்கு இந்திய கனவான்களின் நாமதேய மேதாவது காணப்படுமோவென்று ஆவலுடன் அதைப் பன்முறை புரட்டிப்புரட்டிப் பார்த்ததில் ஷெ நமது நண்பர் ஒருவர் பேரைத் தவிர வேறொன்றையுங் கண்டோமில்லை. ஸ்ரீமான் குருஸ் பெர்னான்டஸ் பொதுநல விஷயங்களில் ஈடுபட்டுழைப்பவர். முனிசிபல் சேர்மன் என்கிற தரப்பில் தூத்துக்குடியில் நல்ல வேலைகள் செய்திருக்கிறார். இவருடைய பரோபகார வேலைகளை மதித்தே கவர்ண்மென்டார் இவருக்கு ராவ்சாகேப் என்னும் கௌரவ பட்டத்தை அளித்துள்ளார்கள். இவருக்கு இன்னும் அதிக பெரிய பட்டங்கள் அளிக்கப்படவேண்டுமெனக் கோருகிறோம்.

சவரனின் விலையிறக்கம்.—இதுவரையில் இருபது ரூபாய்வரையில் பெறுமதி பெற்றுவந்த சவரன் என்னும் தங்க நாணயமானது இந்த ஜூலை௴ 12-ம் தேதிக்குப் பிறகு 10-ரூபாய்க்குத்தான் விலை பெறுமென்றும், அதற்குள் அதை மாற்றிக்கொள்ள விரும்புவோர், கவர்ண்மென்ட் கஜானாவில் ரூ. 15-க்கு மாற்றிக்கொள்ளலாமென்றும் ஒரு கவர்ண்மெண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அந்நிய நாடுகளிலிருந்து தங்க நாணயங்களாவது, தங்கக் கட்டிகளாவது கொண்டுவரப்படாது என்றிருந்த நிபந்தனை இப்போது எடுபட்டுப் போயிற்று. இனியவைகளைத் தாராளமாய்க் கொண்டுவரலாம். நாளது வருஷம் ஜூலை மாதம் 12-ந் தேதிக்கு மேற்பட்டு கொடுக்கப்போகிற தங்க சவரன்களும் இப்பொழுது இருக்கிற சவரன்களைப்போல அதே கனமாகவும், அதே மாத்துள்ளதாகவும் இருக்கும்.

வெள்ளை நரமாமிச பட்சணிகள்.—டாக்டர் ஏ. எச். ரைஸ் என்பவர் அமெரிக்

காவிலுள்ள ஒரிநோக்கோ என்னும் நதியின் உற்பத்தி ஸ்தானத்தைத் தேடிச் சென்று கொண்டிருந்த பிரயாணத்தில், வெள்ளை நரமாமிச பட்சணிகளைக் கண்டதாகத் தெரிவிக்கிறார். ஷெ நதியில் படகின்மேல் பிரயாணஞ்செய்துகொண்டு போகும்போது இவர்கள் சுமார் 200 பேர்கொண்ட கூட்டமொன்று தம்மைக் கண்டு ஓடிவந்து ஆச்சரியத்துடன் பார்த்தார்களென்றும், அந்நாட்டார் நாம் பேசும் பாஷைகளில் எதையும் பேசத் தெரியாதவர்களென்றும், ஆறு முதல் எழு அடி உயரமுடையவர்களென்றும், ஈட்டி, வல்லயம், வில், அம்பு, ஊதுகுழல் முதலியவைகளைக் கொண்டவர்களென்றும், இவர்கள் முதல் முதல், 1763-ம் வருஷத்தில் அதாவது 159 வருஷங்களுக்குமுன் காணப்பட்டார்களென்றும் சொல்லுகிறார். நாகரிகமுற்ற ஜனங்கள் கண்ணுக்கு அகப்படாமல் மெய்யான சர்வேசுரனை யறியாமல் இவர்களைப்போல் இன்னும் எத்தனை காட்டுமிராண்டிகள் இருக்கிறார்களோ யார் அறிவார்?

மரியாயின் மகா சங்கமும் பரிசுத்த தந்தையும்.—அடுத்த குளிர்காலத்தில் சென்னையிற் கூட்டப்படும் மரியாயின் மகா சங்கத்தைப்பற்றி கேள்வியுற்ற நமது பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் மகிமையிலிலங்கும் தேவதாயாரின் ஆதரவில் ஆத்தும இரக்ஷண்ணிய ஆவலுள்ளவர்களால் தூண்டப்பட்ட ஷெ சங்கம் பிரபல்யமாய் நிகழ்ந்தேறி கிறீஸ்துநாதரின் தேவ இராசாங்கம் மேன்மேலும் ஓங்கி வளரும்படி உழைக்க முன்வருபவர்களுக்கும் அச்சங்கத்தில் பங்கடைகிறவர்களுக்கும் தம் ஆசீரை மனப்பூர்வமாய் அளிப்பதாகத் தமது தேசிக காரிய தரிசியாகிய மிகவும் வந்திக்கத்தக்க காஸ்பாரி கர்தினால் அவர்களைக்கொண்டு சென்னை அதிமேற்றிராணியாரவர்களுக்கு சென்ற மே மாதம் 28-ந் தேதி தந்தியொன்று அனுப்பியுள்ளார்.

பரத மஹா ஜன சங்கத்தின் முதலாவது மஹா நாடு.—ஏற்கெனவே விளம்பரஞ் செய்துள்ளபடி அடுத்த ஆகஸ்டுமீ 5உயில், தூத்துக்குடியில், காப்டன் லேயோ எஸ். மசாது, எப். ஆர். ஸி. எஸ்., டி. பி. எச். அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைப்பெறப் போகிற ஷெ மகா நாட்டிற்கு விஜயஞ்செய்யும்படி பரதகுல புருஷ பூவையர்களை வெகு ஆவலுடன் அழைத்தும், அன்னோர்கள் பரத ஜனசமூகம் முன்னேற்றமடையத்தக்க வழிவகைகளை ஆலோசித்துச்செய்ய அவர்களை வற்புறுத்தியும், ஷெ சங்கத்து நிர்வாகக் கமிட்டியாரின் உத்திரவுப்படி கூட்டுக் காரிய தரிசிகள் முதலாவது அறிக்கைப் பத்திரம் என்னும் சுற்றுப் பத்திரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த மஹா நாடு குறித்த தேதியில் கூடி, கோரிய கருத்துக்களை நாடி, காரிய சித்திக்கானவைகளைத் தேடி விஷயங்களை இனிது முடிக்குமெனப் பெரிதும் விரும்புகிறோம்.

கத்தோலிக்கு இந்தியரும், சென்னைச் சட்ட சபையும்.—சென்ற ஜூன்மீ 19-ம் தேதி சென்னையில், சென்னை யதிமேற்றிராணியாரும், தென்னிந்தியா 'கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் அக்கிராசனாதிபதியுமான மிக. வந்தி. அருளப்ப ஆலன் ஆண்டவரவர்கள் சபாநாயகத்தின்கீழ் கூடிய ஷெ சங்கத்தின் நிர்வாக சபையினர் கூட்டத்தில் "பின்வரும் தொகுதிகளிலுள்ள கத்தோலிக்குக் கனவான்கள் அவைகள் எதிரில் குறிக்கப்பட்டுள்ள அபேட்சகருக்கு ஓட்டு கொடுக்கும்படி சிபார்சு செய்யப்படுகிறார்கள்" என்ற தீர்மானம் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. எல்லா விஷயங்களையும் தீர்க்காலோசனை செய்து, ஷெ நிர்வாக சபைக் கூட்டம் தீர்மானித்தபடி நமது கத்தோலிக்கு இந்தியர்கள் எல்லோரும் அடியிற் கண்டுள்ள நபர்களுக்கே தங்கள் ஓட்டுகளைக் கொடுப்பார்களெனக் கோருகிறோம். கத்தோலிக்கு இந்தியரின் பொது நன்மைமையைக் கோரும் நண்பர்கள் தாங்களே ஓட்டர்களாயில்லாவிடினும் ஓட்டர்களாயிருப்பவர்களைச் சம்மதிப்பித்து இந்த நபர்களுக்கே ஓட்டு கிடைக்கும்படி செய்வார்களாக.

(1) வட தொகுதி (கஞ்சம், விசாகப்பட்டணம், குண்டூர் முதலிய ஜில்லாக்களில்)	ஸ்ரீமான் எம். இரத்தினசாமி முதலியார் பி. ஏ., பாரிஸ்டர் அட்-லா. மதராஸ்.
(2) மத்திய வடக்குத் தொகுதி (கடப்பை, கர்நூல், பெல்லாரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சென்னை யுட்பட)	,, ஆனரபில் டி. அருமைநாதப் பிள்ளை பி.ஏ., பி.எல்., ஐகோர்ட்டு வக்கீல், மதராஸ்.

(3) மத்திய தெற்குத் தொகுதி (தஞ்சாவூர் திருச்சினப்பள்ளி மதுரை ஜில்லாக்கள்)	ஸ்ரீமான் எஸ். அற்புதசாமி உடையார் பி.ஏ., எல்.டி., அர்ச். சூசையப்பர் கலாசாலை போதகாசிரியர், திருச்சினப்பள்ளி.
(4) மேற்குத் தொகுதி (சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, தென் கன்னடம் முதலிய ஜில்லாக்கள்)	,, ராவ் சாகேபு இ. சி. எம். மஸ்கரேஞாஸ், மாஜி காட்டிலாகா பாரெஸ்டர், மங்களூர்.
(5) தென் தொகுதி (திருநெல்வேலி, இராமநாதபுரம்)	,, ராவ்சாகேபு குரூஸ் பெர்னான்டஸ், முனிசிபல் சேர்மன், தூத்துக்குடி.

"தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்"—என்ற தலைப் பெயர்கொண்ட ஒரு அருமைச் சிறு புத்தகம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இது யாழ்ப்பாணம் சங். எஸ். ஞானப்பிரகாச சுவாமிகளால் முன்னர் எழுதி அச்சிட்டதின் இரண்டாம் பதிப்பு. இவ்விரண்டாம் பதிப்பு சில திருத்தங்களுடன் பல புது அமிசங்களைச் சேர்த்து அச்சிடப்பட்டது. இதில் தமிழ் என்னும் மொழியின் வரலாறு, தமிழர் பூர்வம் இந்தியா அல்லது புதுக் குடியா? அவர்களது புராதன நாகரீகம், அவர்கள் தென் நாட்டிற் குடி புகுந்த காலம், தமிழ் நூல்களின் தொன்மை, தமிழ்ச் சங்கக் காலம், அவர்களது பூர்வ பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள், தமிழ்ப் பெண்டிரின் வீரம், அவர்களுடைய பூர்வ தெய்வங்கள், சிவன், முருகன், கிருஷ்ணன் முதலியோரின் உற்பத்தியாதியவைகளைப்பற்றி வெகு நுணுநுணுக்கமான ஆராய்ச்சியின் பயனால் உண்டான அபிப்பிராயங்களையும் ஊக்கத்தையும், மற்றும் பல சரித்திர நூலாசிரியர்களுடைய அபிப்பிராயங்களையும் பலமேற்கோள்களுடன் விஷயங்கள் விவரமாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இது வெகு சிரமத்துடனும் பொறுமையுடனும் எழுதப்பட்ட அருமையான புத்தகம். தமிழருடைய பூர்வோத்தரத்தை அறிய விரும்புவோருக்கும், இந்துக்களுடன் வேத தர்க்கம் செய்பவர்களுக்கும் இது பெரிதும் பிரயோஜனமான புத்தகம். இதன் நூலாசிரியரான நமது ஞானப்பிரகாச சுவாமிகள் தமிழருக்கு இப்புத்தகத்தை எழுதித் தந்து பேருபகாரத்தைச் செய்துள்ளார்.

அறிக்கை.

வருஷாந்தரமும் கோவளத்தில் நடந்தேறி வரும் அர்ச். உத்தரியமாதாவின் திருநாள் இம் மாதம் 8-ம் தேதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18-ம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று மிக்கச் சிறப்புடன் முடிவுபெறும்.

ச. மரியானந்தர்,
கோவளம் விசாரணை குரு.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

மைலாப்பூர்

எனது அருமை தந்தை மகா-ா-ா-ஸ்ரீ பு. ம, பல்லாரி இரத்தினசாமி நாயகர் திடீரென்று இரண்டொரு நாள் வியாதியாய் இருந்து, டாக்டர்களால் கைவிடப்பட்டு, தமது 65 பிராயத்தில் சகல தேவத்திரவிய அநுமானங்களையும் பெற்று 1920ஆ ஜூலை 19உ மாலை 6 மணிக்கு நித்திய பிதாவினிடம் தம் ஆத்துமத்தையும் ஒப்புக்கொடுத்து பரலோக பிராப்தியடைந்தார். இதைக் கண்ணுறும் சகோதரர்களே! இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. ஜெபிப்பீர்களாகவும்.

R. I. P.

தந்தையை இழந்து பரிதபிக்கும்,
Rev. இ. லூர்து சஞ்சீவிநாதர்,
San Thome, Mylapore.

பழவேர்காடு

பழவேர்காடு உபதேசியாராகிய அய்யாசாமி செட்டியார் 4 மாதமாய் அதிக வியாதியாயிருந்து சென்றமீ 20உ ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணிக்கு பரலோகபதவியடைந்தார். மறுநாள் நல்லடக்கம் செய்தோம். அவருடைய ஆத்துமத்திற்காக வேண்டிக்கொள்ள வேணுமென்று மிகவாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
பவழை உபதேசியார் குமாரன்,
I. Raja Chetty.

தென் இந்திய ஜாதிபேதமற்ற கத்தோலிக்கு சகோதர ஐக்கிய சங்கம்.

S. M. ஞானப்பிரகாசம் B.A.,
சபைத்தலைவர்.

A. K. சாமுவேல்,
காரியதரிசி.

ஜான் பிரான்ஸிஸ்,
பொக்கிஷதார்.

சங்கத்தின் தலைமை ஸ்தானம்.
178, நம்பர் போர்ச்கீஸ் சர்ச் தெருவு,
G. T. சென்னை.

மதசம்பந்தமல்ல ! இராஜத்துவேஷமல்ல ! !

நமது வகுப்பினரின் பரிதாப நிலைமையைப்பற்றியது.

தக்க சமயம் இதுவே ! இதுவே தக்க சமயம் ! !

நமது சங்கத்தில் உடனே அங்கத்தினராகி புதிய அரசியல் சீர்திருத்தத்தில் நமது வகுப்பினருக்கு ஸ்தானங்கள் கிடைக்க முயற்சிக்கவேண்டும். தென் இந்திய கத்தோலிக்கரில் நமது வகுப்பினர் மூன்று பாகம் அதிகம்.

தவறுதீர்கள் ! மோசம்போகாதீர்கள் ! !

ஷை சங்கத்தின் ஆதரணையில் 1920ஞு எப்பிரல்மீ 21௳ மகா பொது நாடொன்று கூட்டப்பட்டு நம்மவரின் பரிதாப நிலைமையைப்பற்றியும் அந்நிலைமையில் காரணத்தால் தேச சட்ட நிரூபண சபையில் நம்மவர்கட்கும் ஸ்தானங்கள் அளிக்கப்படவேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டு அத்தீர்மானங்கள் கனந்தங்கிய இந்தியா மந்திரி, இந்திய இராஜப் பிரதிநிதி, சென்னை தேசாதிபதி முதலிய மகான்களுக்கு அனுப்பவும்பட்டன.

கண்ணியப்பிரபுகாள் !

தரித்திரமென்னுங் கொடிய உபத்திரவத்தால் கல்வியின் சுவையறிய வகையற்றிருக்கும் நம்மவர்கள் தங்கள் நிலைமையை நன்குணர காலம் இன்னும் வந்தில்லையோ ? அரசியல் முறைமையில் உரிய ஸ்தானம் வகிக்க மற்றெல்லா வகுப்பினரும் அயரா துழைத்து நிற்கையில் நாம் நமது சுதந்தரங்களை இழக்க விரும்பியவர்கள்போல் யாதாமொரு முயற்சியுமின்றி அசமந்தமாயிருக்கலாமா ? பரிதாபத்துக்குரிய நமது நிலைமையைப்பற்றிச் சிந்திக்குங்கால் நம்மவருள் ஊக்கங்கொள்ளாதவாார் ? ஊக்கம் வரின் தரித்திரம் தடைசெய்யுதே ! தரித்திரத்தைத் தவிர்க்க வழியில்லையா ? தருமசிந்தையுடன் ஒவ்வொரு உத்தமரும் நமது சங்கத்தில் அங்கத்தினராகி தம்மாலியன்றவாறு சிறியதோர் தொகையேனுங் கொடுத்துதவ விரும்புவாரேல் மொத்தத்தில் பெரிய தொகையாகி நமது வகுப்பினர் முன்னேற்றமடைய எதுவான விஷயங்களைக் கையாட உதவியாயிருக்கும்.

நமது வகுப்பினரனைவரும் ஷை சக்கத்தில் ஏற்பட்டுள்ள மாதாந்தர சந்தா அணு 1 அல்லது வருஷாந்தர சந்தா அணு 12 பெரிதென்றெண்ணமல் தங்களுக்குத்தானே பிற்காலம் உதவக்கூடிய முதல் என்று கருதி உடனே சங்கத்தில் அங்கத்தினராகி பொது நலத்தின் மட்டில் தங்களுக்குள்ள கடமையைச் செலுத்துவார்களென்று நம்பியிருக்கும்.

A. K. சாமுவேல்,
காரியதரிசி.